TORONTO DISTRICT SCHOOL BOARD
CONTINUING EDUCATION
International Languages - Elementary

BS 050

தமிழ் மொழிப் பயிற்சி நூல்
வகுப்பு 7

TAMIL WORKBOOK
GRADE 7
DRAFT

Toronto District School Board

TDSB Continuing Education

This Tamil Workbook (Grade 7) was developed by instructors of
the International Languages Elementary - Toronto District School Board
to enhance the Ministry of Education's Course Profile
for Primary Tamil International Language Elementary Course

Acknowledgements

A special thanks to the writers of this Tamil "activity book" and the parents, volunteers and community representatives who were involved in the approval of these materials.

©2005 Toronto District School Board

Reproduction of this document for use by staff in the Toronto District School Board is encouraged.

For anyone other than Toronto District School Board staff, no part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any other means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior written permission of the Toronto District School Board. This permission must be requested and obtained in writing from:

Toronto District School Board
Library and Learning Resources
3 Tippet Road
Toronto, ON M3H 2V1

Tel: (416) 397-2595
Fax: (416) 395-5173

Every reasonable precaution has been taken to trace the owners of copyrighted material and to make due acknowledgement. Any omission will gladly be rectified in future printings.

This document has been reviewed for equity.

TABLE OF CONTENTS
உள்ளடக்கம்

1. THE INDIVIDUAL – THE INDIVIDUAL IN SOCIETY 1
தனியாள் - குமுகத்தில் தனியாளது பங்கு

2. FAMILY-COMMITMENTS AND RESPONSIBILITES WITHIN THE FAMILIES 5
குடும்பம் - குடும்ப உறுப்பினர் பொறுப்புகளும் கடமைகளும்

3. COMMUNITY - OUR COUNTRY 10
குமுகம் - நமது நாடு

4. SCHOOL - PERSONAL RELATIONSHIPS 15
பாடசாலை - தனிப்பட்ட உறவுகள்

5. COMMUNICATION - HELPING THE PHYSICALLY CHALLENGED 20
தொடர்பு கொள்ளல் - உடல் ஊனம் உற்றோருக்கு உதவுதல்

6. SAFE PRACTICES - TOBBACO AND ALCOHOL ABUSE 25
பாதுகாப்பு - புகைப் பிடித்தல் மற்றும் மது அருந்துதலின் தீமைகள்

7. PEOPLE HELPING PEOPLE - MULTICULTURAL CONTRIBUTIONS TO CANADIAN SOCIETY 31
மக்களுக்கு உதவும் மக்கள் - க்னடியச் குமுகத்துக்குப் பல்லின மக்களது பங்களிப்புகள்

8. FOOD - TABLE EDIQUETTE 37
உணவு - பண்பாக உண்ணல்

TABLE OF CONTENTS
உள்ளடக்கம்

9. ANIMALS - PRESERVATION AND PROTECTION 42
விலங்குகள் - விலங்குகளைப் பேணலும் பாதுகாத்தலும்

10. THE WORLD OF WORK - LOOKING AND APPLYING FOR A JOB 48
தொழில் உலகம் - வேலை தேடலும் விண்ணப்பித்தலும்

11. UNDERSANDING CHANGES - HISTORY OF SRI LANKA 54
மாற்றங்களை அறிந்து கொள்ளல் - இலங்கை வரலாறு

12. THE WORLD OF PLAY SPORTS - PAST AND PRESENT 60
விளையாட்டு உலகம் - விளையாட்டுகள் அன்றும் இன்றும்

13. THE ENVIRONMENT – CURRENT ENVIRONMENTAL ISSUES 66
சூழல் - இன்று சூழல் எதிர்நோக்கும் சிக்கல்கள்

14. CELEBRATIONS AND SPECIAL EVENTS - RECOGNITION OF PROMINENT HERITAGE AUTHOR 72
விழாக்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் - முதன்மை மரபு நூலாசிரியரை மதித்தல்

15. INTRODUCTION TO LITERATURE - POETRY 78
இலக்கிய அறிமுகம் - பாரதியார் பாக்கள்

16. ETHICAL LITERATURE - THIRUKKURAL 84
அற இலக்கியம் - திருக்குறள்

THE INDIVIDUAL - THE INDIVIDUAL IN SOCIETY
தனியாள் - குமுகத்தில் தனியாளது பங்கு

குமுகம்	பங்களிப்பு	குடும்பங்கள்	அமைப்பு
உறுப்பினர்	முன்னேற்றம்	ஆராய்தல்	கூட்டுவாழ்க்கை
அடிப்படை	தொடர்பு	வாய்ப்புகள்	குமுகாயம்
பண்பாடு	ஏதுக்கள்	பழக்கவழக்கம்	உறுதுணை
கல்விச்சபை	நிறுவனங்கள்	ஊடகங்கள்	இனத்தவர்
ஆர்வம்	ஒற்றுமை	முன்மாதிரி	பண்புகள்
மக்கள்	பெற்றோர்	பெரியோர்	மழலைகள்
பார்த்தல்	மருத்துவமனை	ஒதுக்குதல்	முன் வருதல்

தனியாள் பலர் சேரும் பொழுது குடும்பம் உருவாகிறது. குடும்பம் பல சேரும் பொழுது குமுகம் உருவாகிறது. குடும்பத்தின் ஓர் உறுப்பினரே தனியாள் ஆவார். குமுகம் முன்னேறத் தனியாளின் ஊக்கமும் பங்களிப்பும் தேவை ஆகும். கூட்டு வாழ்க்கை அடிப்படையிலேயே குமுக அமைப்பு உருவானது. ஒருவரோடு ஒருவர் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்தலே குமுக அமைப்பின் அடிப்படை ஆகும். மொழி, இனம், கலை, கல்வி, பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், சமயம் முதலியன குமுக வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன.

பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வெவ்வேறு மொழிகள் கற்பிக்கப் படுகின்றன. கனடிய அரசின் ஆதரவோடு கல்விச் சபைகள், குமுகத் தொண்டு அமைப்புகள் முதலியன இப்பணியைச் செய்து வருகின்றன. மாணவர் தாம் விரும்பிய மொழிகளைக் கற்கக் கூடிய வாய்ப்பினைக் கல்விச் சபை வழங்கியுள்ளது. இதனால், மாணவர் பிற மொழிகளைப் பயிலும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக மாணவர் குமுதாயம், மொழிப்பற்று, ஆர்வம், ஒற்றுமை, புரிந்துணர்தல், பிறரை மதித்தல் போன்ற பண்புகளை வளர்க்க வழி பிறந்துள்ளது.

இவ்வாறாகத் தனியாள் ஊக்கம் அளிக்கப்படுகிறார். இந்தச் செயலானது வருங் காலத்தில் நன்மக்கள், நாட்டுப் பற்றாளர், நுண் அறிவாளர் முதலியோர் உருவாக வழி வகுக்கும். கனடா மக்கள் தாம் வாழ உதவும் கனடா நாட்டை விரும்பி மதித்து நடத்தல் வேண்டும். இந்நாட்டின் பொதுச் சொத்துகளைக் காக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டும். பிறருக்கு முன் மாதிரியாக விளங்க வேண்டும்.

பிறர் உதவியை நாடி இருப்போரை அறிந்து உதவ வேண்டும். மொழிச் சிக்கலால் துன்புறுவோர், வழி தெரியாது இடர்ப் படுவோர் முதலியோருக்கு உதவ வேண்டும். சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எமது கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அழியாது காக்க

வேண்டும். பெரியோர் சிறியோரை நல்ல வழியில் நடத்தல் வேண்டும். விழாக்கள், ஒன்று கூடல்கள், கூட்டங்கள் போன்றவற்றிலும் இவற்றைப் பேண வேண்டும். சிறார் மனதில் நல்ல கருத்துகளை ஆழமாகப் பதித்தல் வேண்டும். இவ்வாறு தனியாள் நல்நோக்கத்தோடு நடப்பின், தனியாள், குடும்பம், குமுகம் ஆகியன பயனடையும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  எவ்வாறு ஒரு குமுகம் உருவாக்கப் படுகிறது?

  ஒரு குமுகத்தைத் தாழ் நிலைக்குத் தள்ளக் கூடிய ஏதுக்கள் எவை?

  கனடா நாட்டின் பழங்குடி மக்களின் குமுகத்தையும் புலம் பெயர்ந்து வந்தோர் குமுகத்தையும் ஒப்பிட்டுக் கலந்து உரையாடுக.

  ஒரு குமுகம் முன்னேற மாணவர் செய்யக் கூடியவை எவை என்பது பற்றிக் கலந்து உரையாடுக.

  தனியாள் ஒருவர் எவ்வாறு தனது குமுக மேம்பாட்டுக்கு உதவலாம் என்பதை விளக்க ஒரு சிறுகதை எழுதுக.

  குமுகத்தை மேலோங்கச் செய்த ஒருவர் பற்றிச் சிறு கட்டுரை எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களிலுள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
குமுகம்				
உதவுதல்				
முன்மாதிரி				
பிறர்நலம்				
தனியாள்				
உறுப்பினர்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
பங்களிப்பு			
குடும்பங்கள்			
கல்விச் சபை			
தனியாள்			

- பின்வரும் சொற்களை குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
குமுகம்		
கூட்டு வாழ்க்கை		
தனிமனிதன்		
பெரியோர்		
ஏதிலியர்		
குமுகாயம்		
ஏதுக்கள்		

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

கு __ ம்பம்
மழலை __ ள்
ஒற்று __
கா __ தல்

உறு __ பினர்
தனி __ ள்
கடைப் __ டித்தல்
முதி __ வர்

- ஒத்த சொல் எழுதுக.

இடர் ____________________
அமைப்பு ____________________
கற்றல் ____________________
இணைந்து ____________________

மழலை ____________________
அகவை ____________________
குமுகாயம் ____________________
சான்றோர் ____________________

- எதிர்ச் சொல் எழுதுக.

ஆதரவு ____________________
பிரித்தல் ____________________
துன்பம் ____________________

ஒற்றுமை ____________________
ஆக்கல் ____________________
ஊக்கம் ____________________

- சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

மளலை	மலலை	மழலை	மழழை
பன்பு	பந்பு	பங்பு	பண்பு
பந்பாடு	பன்பாடு	பண்பாடு	பண்படு
மொலி	மொளி	மொழி	மெளி
வாழ்கை	வாள்க்கை	வாழ்க்கை	வால்க்கை
மனிதண்	மநிதன்	மணிதன்	மனிதன்

- கல்வி என்ற சொல்லின் இறுதி எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு நான்கு புதிய சொற்கள் உருவாக்குக.

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

நாட்டுப்பற்று	=	______	+	______
பழக்கவழக்கம்	=	______	+	______
கலந்துரையாடல்	=	______	+	______
கல்விச்சபை	=	______	+	______
பங்களிப்பு	=	______	+	______
செவ்விந்தியர்	=	______	+	______

- பன்மைச் சொல் எழுதுக.

மாந்தன்	______	குடும்பம்	______
அரங்கம்	______	விழா	______
நிறுவனம்	______	ஊடகம்	______
குடிமகன்	______	சான்றோன்	______

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

மக்கள்	சிந்திப்போம்	மனிதன்	சிறுவர்
குடும்பம்	ஊடகம்	வாழ்கிறோம்	ஏதிலி
பாடசாலை	செயலாற்றுகிறது	வழங்குகிறது	சமூகம்

பெயர்ச் சொற்கள்	வினைச் சொற்கள்

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

குழுகாயம்	ஒற்றுமை	நாட்டுப்பற்று	பங்களிப்பு
சான்றோன்	உதவுதல்	தொண்டு	ஊடகங்கள்

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

FAMILY - COMMITMENTS AND RESPONSIBILITIES WITHIN THE FAMILIES
குடும்பம் - குடும்ப உறுப்பினர் பொறுப்புகளும் கடமைகளும்

குடும்பம்	பெற்றோர்	உறுப்பினர்	கடமை
பொறுப்பு	உறவினர்	குமுகப்பணி	வாழ்க்கை
கல்வியறிவு	உறுதுணை	புரிந்துணர்வு	நுண்ணறிவு
செயற்பாடு	ஊக்கம்	பாதுகாப்பு	உறைவிடம்
இரக்கம்	நன்முறை	சான்றோர்	மந்தகுலம்
தொண்டர்	திகழ்தல்	நாட்டுப்பற்றாளர்	நற்பண்பு

பெற்றோரும் பிள்ளைகளும் அடங்கிய அமைப்பே குடும்பம் ஆகும். சில குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளோடு வேறு உறவினரும் கூடி வாழ்கின்றனர். இதைக் கூட்டுக் குடும்பம் என்பர்.

கனடாவில் தாய், தந்தை, பிள்ளைகள் கொண்ட குடும்பம்; தந்தை, தாய், பிள்ளைகளோடு பாட்டன், பாட்டி கொண்ட குடும்பம்; தனித் தாய், அல்லது தந்தையோடு பிள்ளைகள் சேர்ந்து வாழும் குடும்பம்; பெண்ணும் பெண்ணும் பிள்ளைகளும் சேர்ந்து வாழும் குடும்பம் (ஒரு பால் குடும்பம்); ஆணும் ஆணும் பிள்ளைகளும் சேர்ந்து வாழும் குடும்பம் (ஒரு பால் குடும்பம்); சட்டப்படி திருமணம் செய்யாது சேர்ந்து வாழும் குடும்பம் எனப் பல்வேறு குடும்ப அமைப்புகள் காணப்படுகின்றன.

குடும்ப அமைப்புகள் வேறாக இருந்தாலும் அவை யாவும் ஒற்றுமையாக வாழவேண்டும். குடும்ப உறுப்பினர் பொறுப்போடும் கடமை உணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும். குடும்பம் சிறப்புற அமைய, ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் அன்பு, பொறுமை, நன்னெறி, விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு, ஊக்கம், குமுகப்பணி மற்றும் பெரியோரை மதித்தல் முதலியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குடும்பத்தை நல்வழியில் நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. பெற்றோருக்கு உறுதுணையாகப் பிள்ளைகளும் பிற உறவினரும் செயற்படல் வேண்டும். குடும்ப வாழ்க்கைய்யச் சிறப்புற அமைத்துப் பிறர் போற்றும் நல்லதொரு பல்கலைக் கழகமாக வாழவேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம், கல்வி முதலிய வசதிகளை நல்ல முறையில் வழங்குதல் வேண்டும். பிள்ளைகள் நற்பண்போடு நடத்தல் வேண்டும். தமக்கும் தம் குடும்பத்துக்கும் குமுகத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித்தரல் வேண்டும்.

குடும்ப உறுப்பினர் அனைவரும் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டுப் பயனுள்ள தொண்டு ஆற்ற முன் வருதல் வேண்டும். பிள்ளைகளுக்குச் சிறு வயதில் இருந்தே இவற்றைச் செய்யப் பழக்குதல் நன்று. இதனால் அவர்கள் எதிர் காலத்தில் சிறந்த குமுகத் தொண்டராக, சான்றோராக, நாட்டுப் பற்றாளராகத் திகழ்வர்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  தனிக் குடும்பம் என்றால் என்ன?

  கூட்டுக் குடும்பம் என்றால் என்ன?

  தனித் தாய் அல்லது தனித் தந்தைக் குடும்பம் என்றால் என்ன?

  எவ்வகையான குடும்பம் சிறந்தது என நீர் கருதுகிறீர்? ஏன்?

  பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை?

  குடும்ப உறுப்பினர் எப்படி ஒழுகுதல் வேண்டும் என்பதைப் பற்றிக் கலந்து உரையாடுக.

  பிள்ளைகள் தமது பெற்றோருக்கு எந்த வகையில் உதவி செய்யலாம் என்பதைப் பற்றிக் கலந்து உரையாடுக.

  கனடாவில் வாழும் தமிழ்க் குடும்பங்களுக்கும் பிற குடும்பங்களுக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமை பற்றிக் கலந்துரையாடுக.

  ‘நல்லதொரு குடும்பம்’ என்ற தொடரைக் குழுக்களாக ஆராய்க. அதனை விளக்கும் வகையில் ஒரு நாடகம் நடித்துக் காட்டுக.

  ‘கனடாவில் குடும்ப வாழ்க்கை’ என்பது பற்றி ஈழ நாட்டில் உள்ள உமது நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

- பின்வரும் சொற் தொடர்கள் வலியுறுத்தும் திருக்குறட் பாக்களை எழுதுக.

  பெற்றோர் கடமை
  பிள்ளைகளின் கடமை
  தாய் பெருமிதம் அடையும் நேரம்

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உறையுள்				
தொண்டர்				
குமுகம்				
திருமணம்				
வாழ்க்கை				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
கடப்பாடு			
சான்றோர்			
திருமணம்			
நாட்டுப்பற்று			
திண்ணம்			
போற்றுதல்			
செயற்பாடு			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
தொண்டர்		
ஈடுபடுதல்		
ஊக்கம்		
மேம்பாடு		
உறையுள்		
சான்றோர்		

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

__ றையுள்
பிள் __ கள்
நுண்ண __ வு
பொ __ ப்பு

தொ __ டர்
ஊக் __ ம்
நற்ப __ பு
போ __ றுதல்

- ஒத்த சொல் எழுதுக.

உணவு	________	அன்னை	________
உறையுள்	________	தந்தை	________
உடை	________	சேய்	________
உண்ணல்	________	அருந்துதல்	________

- எதிர்ச் சொல் எழுதுக.

புகழ்ச்சி	________	நல்லது	________
பெருமை	________	வாய்மை	________
இன்பம்	________	சிறியோர்	________
ஏழை	________	இறக்கம்	________

- பன்மைச் சொல் எழுதுக.

தொண்டன்	________	உறைவிடம்	________
இளைஞன்	________	பொறுப்பு	________
குமுகம்	________	மாந்தன்	________
உறவினன்	________	குடிமகன்	________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

உறவினர்	வளர்ப்போம்	மதிப்போம்	குடும்பம்
சான்றோர்	வாழ்கின்றனர்	சிறார்	முதியோர்
பாராட்டினார்	கடைப்பிடித்தனர்	பெண்	ஆண்

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

முந்னேற்றம்	முண்னேற்றம்	முன்னேற்றம்
தொன்டர்	தொண்டர்	தொந்டர்
திருமநம்	திருமனம்	திருமணம்
புகழுதல்	புகளுதல்	புகழுதள்
நல்வலி	நல்வளி	நல்வழி

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

இல்வாழ்க்கை	=	______	+	______
வெவ்வேறு	=	______	+	______
புரிந்துணர்வு	=	______	+	______
நல்வழி	=	______	+	______
விட்டுக்கொடுத்தல்	=	______	+	______

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக

செயற்பாடு	______	பாதுகாப்பு	______
பொறுப்பு	______	புரிந்துணர்வு	______
நுண்ணறிவு	______	குடும்பம்	______
குமுகப் பணி	______	உறுப்பினர்	______
தொண்டர்	______	மாந்தர்குலம்	______

Volunteer	Understanding	Social work	Member	Activity
Family	Responsibility	Safety	Mankind	Intelligent

- பின்வரும் சொற்றொடர்களுக்கு இணையான தனிச் சொல் எழுதுக.

அன்னையின் அண்ணன் மகள்	______
தாயாரது தாயின் தாய்	______
தாயாரின் தங்கை	______
தாயாரின் தம்பி	______
தந்தையின் தம்பி	______
தந்தையின் தங்கை	______

- பின்வரும் சொற்கள் வினையாகவும் பெயராகவும் வருமாறு சொற் தொடர்கள் எழுதுக.

படி கலை உறை அடி அலை அறை

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

COMMUNITY - OUR COUNTRY
குமுகம் - நமது நாடு

கனடா	பழங்குடிகள்	கால்நடை	தங்கம்
எல்லை	ஐரோப்பியர்	மின்வலு	வெள்ளி
நீர்வளம்	ஆட்சிப்பிரிவு	கோதுமை	செம்பு
நிலவளம்	இனங்கள்	மீன்பிடி	இரும்பு
கடல்வளம்	குடியேற்றம்	மரங்கள்	நிலநெய்
காட்டுவளம்	குடியமர்வு	விலங்குகள்	பரப்பளவு
மனிதவளம்	தலைநகர்	ஆளுநர்	நீர்வீழ்ச்சி
கனிப்பொருள்	மாநிலம்	அமைச்சர்	துருவம்

நாம் வாழும் நாடு கனடா ஆகும். இது வட அமெரிக்காவில் அமைந்து உள்ளது. இது உலகின் இரண்டாவது பெரிய நாடு ஆகும். இதன் பரப்பளவு 9,976,140 சதுரக் கிலோ மீற்றர், குடித் தொகை ஏறத்தாழ 3.2 கோடி ஆகும். கிழக்கே அத்திலாந்திக் மாகடலும் மேற்கே பசுபிக் மாகடலும் தெற்கே ஐக்கிய அமெரிக்காவும் வடக்கே வட துருவமும் கனடாவின் எல்லைகளாக உள்ளன.

செவ்விந்தியரும் இன்யூட் மக்களும் கனடாவின் பழங் குடிகள் ஆவர். 16ஆம் நூற்றாண்டில் பிரான்சியர் இங்கு குடியேறத் தொடங்கினர். அதன் பின் ஆங்கிலேயர் குடியேறத் தொடங்கினர். 1763ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கனடா முழுவதையும் கைப்பற்றினர். 1867ஆம் ஆண்டு குடியேற்றங்கள் இணைந்து கனடா நாடு உருவானது. அதன்பின் பல் வேறு நாடுகளிலும் இருந்து மக்கள் குடியேறி வருகின்றனர். இன்று உலகிலுள்ள எல்லா இன மக்களும் இங்கு வாழ்கின்றனர். ஆதலால், கனடாவைப் பல்லினப் பண்பாடு கொண்ட நாடு என அழைக்கின்றோம்.

இன்று கனடாவில் பத்து மாநிலங்களும், மூன்று ஒதுக்கீட்டுப் பகுதிகளும் உள்ளன. பழங் குடிகள் ஒதுக்கீட்டுப் பகுதியில் வாழ்கின்றனர். பிற மக்கள் பத்து மாநிலங்களிலும் வாழ்கின்றனர். நாம் ஒன்ராறியோ மாநிலத்தில் வாழ்கின்றோம். இதுவே மக்கள் அதிகம் வாழும் மாநிலம் ஆகும். கனடா மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் இங்கு வாழ்கின்றனர். கனடாவின் தலைநகர் ஒட்டோவா ஆகும்.

கனடா நிலம், நீர், கடல், காடு, கனிப் பொருள் வளம் நிறைந்த நாடு ஆகும். நிலத்தில் இருந்து தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு முதலியன கிடைக்கின்றன. கோதுமைச் செய்கை சிறப்பாக நடைபெறுகிறது. கால்நடை வளர்ப்பும் இடம் பெறுகின்றது. நீரில் இருந்து மின்வலுக் கிடைக்கின்றது. கடலில் மீன் பிடிப்பு நடைபெறுகின்றது. கடல் உணவுகள் கிடைக்கின்றன. காட்டிலிருந்து மரமும், விலங்குகளும் கிடைக்கின்றன.

கனடாவின் முதற் தலைமை அமைச்சர் சேர் யோன் ஏ. மக்டொனால்ட் ஆவார். இன்று போல் மார்ட்டின் தலைமை அமைச்சராக உள்ளார். எலிசபெத் அரசியார் கனடாவின் அரசுத் தலைவர் ஆவார். அட்றியர் கிளாக்சன் கனடாவின் ஆளுநர் ஆவார். ஆங்கிலமும் பிரெஞ்சும் கனடாவின் ஆட்சி மொழிகள் ஆகும். யூலை முதலாம் நாள் கனடா நாள் ஆகும். இந்த விடுமுறை நாளை எல்லோரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  கனடா எங்கு அமைந்துள்ளது?

  கனடாவின் மக்கள் தொகை எவ்வளவு?

  ஆங்கிலேயர் கனடா முழுவதையும் எப்பொழுது கைப்பற்றினர்?

  கனடா எந்த ஆண்டு உருவானது?

  கனடாவில் எத்தனை மாநிலங்கள் உள்ளன?

  கனடாவின் ஆட்சி மொழிகள் எவை?

  கனடாவின் மூன்று மட்ட அரசுகள் பற்றிக் கலந்து உரையாடுக.

  கனடாவின் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற ஆட்சி முறை பற்றி ஆசிரியர் துணையோடு கலந்து உரையாடுக.

  கனடா ஆட்சியில் அரசி, ஆளுநர், தலைமை அமைச்சர் ஆகியோர் வகிக்கும் பங்குகள் பற்றிக் கலந்து உரையாடுக.

  கனடாக் குடித் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் ஒன்ராறியோவில் வாழ்வதற்கான காரணங்கள் பற்றிக் கலந்து உரையாடுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
கனடா				
நீர் வீழ்ச்சி				
கனிப்பொருள்				
மாகடல்				
மாநிலம்				
குடியாட்சி				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
நீர்வளம்			
கடல்வளம்			
பழங்குடிகள்			
நிலம்			
கனிப்பொருள்			
தங்கம்			
அமைச்சர்			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
அமெரிக்கா		
ஐரோப்பியர்		
நீர்வீழ்ச்சி		
கோதுமை		
மீன்படி		
தலைநகர்		

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

ஒ __ டாவா
வெ __ ளி
மாநி __ ம்
இ __ ம்பு

செவ் __ ந்தியர்
கால் __ டை
பழங்கு __ கள்
மி __ வலு

- ஒத்த சொல் எழுதுக.

கடல் ________________
மக்கள் ________________
ஆறு ________________
காடு ________________

அதிகம் ________________
எல்லோரும் ________________
கால்நடை ________________
உணவுகள் ________________

- எதிர்ச் சொல் எழுதுக.

பழமை ________________
வளம் மிக்க ________________
வேற்றுமை ________________
சிறிய ________________

வறண்ட ________________
உயர்வு ________________
உறைதல் ________________
விரைவாக ________________

- பன்மைச் சொல் எழுதுக.

மாநிலம்	______________	காடு	______________
நகரம்	______________	ஒன்று	______________
நிலம்	______________	தீவு	______________
கனிப்பொருள்	______________	வளம்	______________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

கனடா	நீர்வீழ்ச்சி	மாநிலங்கள்	குடிகள்	அழித்தான்
நகர்	குடியேறினர்	குடியமர்ந்தனர்	அளித்தனர்	குடித்தனர்

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

ஆட்சிப்பிரிவு = ______________ + ______________
வழித்தோன்றல் = ______________ + ______________
குடியமர்வு = ______________ + ______________
குடியேற்றம் = ______________ + ______________
பழங்குடிகள் = ______________ + ______________
கனிப்பொருள் = ______________ + ______________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

கலந்து + உரையாடுக = ______________
பழம் + குடிகள் = ______________
நாடு + படம் = ______________
பிறர் + ஆட்சி = ______________
மலை + தொடர் = ______________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

எல்லை	______________	தங்கம்	______________
பரப்பளவு	______________	வெள்ளி	______________
பழங் குடிகள்	______________	இரும்பு	______________

மின்வலு ______________ மா நிலங்கள் ______________
செம்பு ______________ மீன்பிடி ______________

Border	Provinces	Aboriginal	Electricity	Iron
Silver	Area	Gold	Copper	Fishing

- கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

வாழ்ந்தான்	ஆண்டான்	உரையாடினேன்
படித்தாய்	வாழ்கிறேன்	போரிட்டான்
கொண்டாடினேன்	வாசித்தாய்	சென்றாய்
குடியேறினாய்	குடியேறினேன்	கைப்பற்றினர்
வென்றான்	நாங்கள்	அவள்
அவன்	நீங்கள்	முதலமைச்சர்
பழங்குடிகள்	ஆங்கிலேயன்	நடுங்கினேன்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பின்வரும் சொற் தொடர்கள் சரியாயின் 'சரி' என்றும் பிழையாயின் 'பிழை' என்றும் அடையாளமிடுக.

கனடா ஒரு தீவு ஆகும். ( )
கனடாவின் தலை நகர் ஒட்டாவா ஆகும். ( )
நயாகரா நீர் வீழ்ச்சி வன்கூவரில் உண்டு. ( )
கனடாவில் மக்கள் அதிகம் வாழ்வது ஒன்ராறியோவில் ஆகும். ( )
கனடாவில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். ( )

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

தலைமை அமைச்சர்	முதலமைச்சர்	காலநிலை
மாநகர முதல்வர்	மாநிலம்	வானிலை

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

SCHOOL - PERSONAL RELATIONSHIPS
பாடசாலை - தனிப்பட்ட உறவுகள்

தன்னலம்	பிறர்நலம்	தொடர்புகள்	ஊடகங்கள்
ஆய்வுகூடம்	அறிவுரை	நோக்கம்	நற்குணம்
பரிசளிப்பு	வல்லுநர்	கைகொடுத்தல்	அல்லல்
இன்னல்	மறுவாழ்வு	ஏதிலியர்	எழுச்சி
ஆதரவற்றோர்	கணினி	கருவிகள்	அமைத்தல்
தொழில்நுட்பம்	ஒளி	நற்செய்தி	ஆழமாக
தெளிவாக	வீணாதல்	சிந்தித்தல்	உதவுதல்
சேர்த்தல்	செயற்படுதல்	பயிற்றுவித்தல்	முனைதல்

நாம் தன்னலம் கருதுபவராக இருத்தல் கூடாது. பொது நலன் விரும்புபவராக வாழ்தல் வேண்டும். பிறருக்கு உதவும் நோக்கோடு மற்றவர்களோடு நாம் கொள்ளும் தொடர்புகளே தனிப்பட்ட தொடர்புகள் ஆகும். தனிப்பட்ட தொடர்புகளை நாம் ஏன் வைத்திருத்தல் வேண்டும், எப்படி வைத்திருத்தல் வேண்டும், யாருடன் வைத்திருத்தல் வேண்டும் என்பவற்றை ஆழமாகவும் தெளிவாகவும் நாம் தெரிந்து கொள்வது நன்று.

மற்றவர்களோடு பழகும் பொழுது அவர்களது குணம், பழக்க வழக்கம் முதலியவற்றை நன்கு அறிதல் வேண்டும். நம்பிக்கைக்கு உரியோரை, இடர் வேளைகளில் உதவி செய்வோரை, இன்னல் விளைவிக்காதோரை அறிந்து அவர்களோடு தொடர்பு வைத்தல் வேண்டும்.

பாடசாலைகளில் எமக்கு அறிவு புகட்டும் ஆசிரியர்களை மதித்தல் வேண்டும். அவர் சொற்படி ஒழுகி, அவர்களது நன் மதிப்பைப் பெறல் வேண்டும். நற் பண்புள்ள நண்பரை அறிந்து அவர்களோடு சேரல் வேண்டும். தவறு செய்யும் நண்பரைத் திருத்தி நல்லவராக்க வேண்டும். கல்வியில் பின் தங்கிய நிலையில் உள்ள நண்பர்களுக்கு உதவ வேண்டும். இன்னல் உற்றோருக்கு உதவ முன் வர வேண்டும்.

பெற்றோர், முதியோர், அறிஞர், ஆசிரியர் முதலியோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டல் வேண்டும். அறிவு தரும் நூல்களை வாசித்தல் வேண்டும். நூல்கள், கணினிகள், செய்தி இதழ்கள், வானொலிகள், தொலைக் காட்சிகள் முதலியவற்றின் வழியாக நல்லவற்றை அறிதல் வேண்டும். அறிந்ததை, ஆராய்ந்து சிந்தித்துத் தெளிவடைதல் வேண்டும். மாணவரிடையே இரக்கம், அன்பு, பொறுமை, ஆர்வம், விடா முயற்சி போன்ற நற் பண்புகளை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

நாம் தனிப்பட்ட தொடர்புகளை ஏன் வைத்திருத்தல் வேண்டும்?

நல்ல நண்பர் என்பவர் யார்?

உமது நண்பர் நல்லெண்ணம் படைத்தவர்களா என்பதை எப்படி அறிந்து கொள்வீர்?

இடரில் உதவுபவனே நண்பன் என்பதை விளக்க ஒரு கதை எழுதுக.

தீய வழியில் செல்லும் நண்பனை எவ்வாறு நல்வழிப் படுத்தலாம் என்பது பற்றிக் கலந்து உரையாடுக.

நன்மை விளைவிக்கும் தொடர்புகள் பற்றிக் கலந்து உரையாடுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
நற்குணம்				
ஆய்வுகூடம்				
நண்பன்				
உதவி				
பாடசாலை				
ஆசிரியர்				
தீமை				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
ஊடகம்			
நற்பண்பு			
நண்பர்			
கருவிகள்			
அல்லல்			
தொடர்புகள்			
ஆசிரியர்			
ஆய்வுகூடம்			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
இன்னல்		
சான்றோன்		
ஊடகம்		
கல்வி		
தொடர்பு		

- ஒத்த சொல் எழுதுக.

அல்லல் ______________ ஆசிரியர் ______________
நண்பர் ______________ பயிலல் ______________
நூல் ______________ செழிப்பு ______________
செய்தி இதழ் ______________ வல்லுநர் ______________

- எதிர்ச் சொல் எழுதுக.

ஒளி ______________ நற் குணம் ______________
எழுச்சி ______________ கெட்டவன் ______________
நட்பு ______________ நிறைவு ______________
விருப்பு ______________ தன்னலம் ______________

- பன்மைச் சொல் எழுதுக.

குணம் ______________ நடுவம் ______________
தொடர்பு ______________ தீயவன் ______________
வாய்ப்பு ______________ குறை ______________
கல்விக்கூடம் ______________ நுட்பம் ______________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

போல சாலச்சிறந்த உறுதுணை நனிபேதை
எனவே களிநடனம் ஆதலால் ஆகவே

இடைச் சொல்	உரிச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

குமுகவமைப்பு = ________________ + ________________
அறிவுரை = ________________ + ________________
தன்னம்பிக்கை = ________________ + ________________
தீங்கிழைப்போர் = ________________ + ________________
நற்பண்பு = ________________ + ________________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அன்பு + அளிப்பு = ________________
தொலை + காட்சி = ________________
அறம் + நெறி = ________________
கல்வி + கூடம் = ________________
ஒன்று + ஒன்று = ________________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

படித்தார்கள்	செய்கிறான்	வருவார்
கற்பிக்கிறார்	படித்தனர்	சிந்தித்தான்
உதவுகின்றன	அறிவோம்	செய்கிறான்
வாசித்தாள்	கேட்கிறான்	எழுதுவோம்
அறிவீர்கள்	உதவுவார்கள்	செய்தன

இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

தன்னலம் ________________ தொழில்நுட்பம் ________________

ஆய்வுகூடம் ________________ நோக்கம் ________________

முனைதல் ________________ பரிசளிப்பு ________________

மறுவாழ்வு ________________ அறிவுரை ________________

ஊடகம் ________________ வல்லுநர் ________________

Selfish	Professional	Motive	Prize giving	Advice
Media	Rehabilitation	Initiative	Technology	Laboratory

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

வானொலி	அறிவுரை	நம்பிக்கை	சான்றோன்
கருவிகள்	மறுவாழ்வு	ஊடகங்கள்	இன்னல்

- பின்வரும் சொற் தொடர்களுக்கு ஏற்ற பழமொழிகளை எழுதுக.

சிறு வயதில் திருந்தாதவர் பெரியவராகிய பின் திருந்த மாட்டார்.

சிறு வயதிற் படிப்பது நம் உள்ளத்தில் அழியாமல் நிற்கும்.

கெட்டவரோடு சேர்ந்தால் நல்லவரும் கெட்டவர் ஆவர்.

பழமொழிகள்

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

பன்றியோடு கூடிய கன்றும் எச்சம் தின்னும்.

- பின்வரும் விடுகதைகளுக்கு விடை எழுதுக.

எட்டுக் கால் ஊன்றி இருகால் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வாறாராம் வன்னியனார். அவர் யார்?

ஏறேறு சங்கிலி இறங்கிறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தட்டி வா சங்கிலி. அது என்ன?

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

COMMUNICATION - HELPING THE PHYSICALLY CHALLENGED
தொடர்பு கொள்ளல் - உடல் ஊனம் உற்றோருக்கு உதவுதல்

தன்னலம்	பிறர்நலம்	நம்பிக்கை	முன்னேற்றம்
நேர்ச்சி	உறுப்பு	ஊனமுற்றோர்	உடல்வலு
திறமை	முதியோர்	இளைஞர்	தலையாய
ஒவ்வொருவரும்	உதவிகள்	வாய்ப்பு	நிறுவனம்
பிறப்பு	பொதுவான	இயல்பான	தனியாள்
சிக்கல்கள்	எதிர் நீச்சல்	ஊக்கம்	உறுதி
குறைவற்ற	நிறைவான	நோயற்ற	குறைபாடு
தளர்வு	மனச்சோர்வு	அறிவாளர்	அறிவியல்

உடல் ஊனம் சிலருக்குப் பிறப்பிலேயே ஏற்படுகிறது. வேறு சிலருக்கு நேர்ச்சியால் (accident) ஏற்படுகிறது. இன்னும் சிலருக்கு நோய்களால் ஏற்படுகின்றது. சில உடல் ஊனத்தை மருத்துவத்தால் குணப்படுத்த முடியும். சிலவற்றைக் குணப்படுத்த முடியாது.

அறிவியல் வளர்ச்சி, உடல் ஊனமுற்றோர் இயல்பு வாழ்க்கை வாழ வழி செய்துள்ளது. அவர்கள் தாமாக இயங்க வழி வகுத்துள்ளது. உடல் ஊனம் உற்றோர் பல திறமைகள் கொண்ட நுண் அறிவாளராகக் காணப்படுவர். சில நாடுகளில் அவர்களது திறமையை வெளிக் கொண்டு வர வாய்ப்புகள் குறைவு ஆகும். கனடாவில் இந்த வாய்ப்புகள் கூடுதலாக உள்ளன. அவர்களது திறமைகளைக் கண்டறிந்து, அவர்கள் முன்னேறக் கனடா அரசும் தொண்டு நிறுவனங்களும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

கண்ணில் குறைபாடு உள்ளோரை, அறுவை மருத்துவம் மூலம் பார்வை பெறச் செய்யலாம். வேறு கண்களைப் பொருத்திப் பார்வை பெறச் செய்யலாம். 'பிரெயில்' எனப்படும் தட்டெழுத்து வகையைக் கற்பதன் மூலம் பிறரோடு தொடர்பு கொள்ளலாம். காதிற் குறைபாடு உள்ளோரை, மருத்துவம் மூலம் அல்லது கருவிகளைப் பொருத்தி கேட்கும் ஆற்றலைப் பெறச் செய்யலாம். பேச முடியாதோர், சைகை மூலம் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் பிறருக்குப் புலப்படுத்தலாம்.

அவர்களது திறமைகளையும் தேவைகளையும் அறிவோம். அவர்களது திறமைகளை வெளிக் கொண்டு வர முயற்சிப்போம். அவர்கள் மனம் தளராமல் தன் நம்பிக்கையோடு இயல்பு வாழ்க்கை வாழ எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

நீர், உடல் ஊனம் உற்றோருக்கு உதவிய ஒரு நிகழ்வை விளக்கி எழுதவும்.

உடல் ஊனம் உற்றோருக்குச் செய்யக் கூடிய உதவிகள் பற்றிக் கலந்து உரையாடுக.

கனடாவிலும் பிற நாடுகளிலும் உடல் ஊனம் உற்றோருக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றிக் கலந்து உரையாடுக.

பணியாளர் ஒருவர், தொழிலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது நேர்ச்சியால் கால் ஊனம் உற்றார். அவருக்குக் கிடைக்கக் கூடிய உதவிகள் பற்றிக் கலந்து உரையாடுக.

உடல் ஊனம் உற்றோருக்கு உதவக் கூடிய கல்வி, பயிற்சி நெறிகள் பற்றிக் கலந்து உரையாடுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களிலுள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
மருத்துவம்				
உறுப்பு				
நேர்ச்சி				
ஊனம்				
சோர்வு				
இயலாமை				
அறிவாளர்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
ஊனம்			
செவிப்புலன்			
நம்பிக்கை			
கருவிகள்			
உடல்வலு			
ஊக்கம்			
சிறப்பு			

- பின்வரும் சொற்களை குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
ஊனம்		
உறுப்பு		
உடல்வலு		
காது		
வெறுப்பு		
காலநிலை		

- ஒத்த சொல் எழுதுக.

உறுப்பு ________________ உடல் ________________
ஊனம் ________________ முதியோர் ________________
நேர்ச்சி ________________ திறமை ________________
செவி ________________ கலங்குதல் ________________

- எதிர்ச் சொல் எழுதுக.

சினம் ________________ இயற்கை ________________
முதியோர் ________________ வெறுப்பு ________________
குறை ________________ பிறப்பு ________________

- பன்மைச் சொல் எழுதுக.

உறுப்பு ________________ நோய் ________________
செவிப்புலன் ________________ இடர் ________________
பணி ________________ வாய்ப்பு ________________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

உதவினான் முயல்வோம் செவி உறுப்பு கண்
ஊனமுற்றோர் தீர்ப்போம் மருத்துவர் நிறுவனம் வழங்கும்

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

தட்டெழுத்து	=	______	+	______
ஊனமுற்றோர்	=	______	+	______
உடலுறுதி	=	______	+	______
பெறக்கூடிய	=	______	+	______
பிறரோடு	=	______	+	______

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

செவி	+	புலன்	=	______
அறுவை	+	மருத்துவம்	=	______
அறிவு	+	அற்றோர்	=	______
கை	+	தொழில்	=	______
திறமை	+	உள்ள	=	______

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

நேர்ச்சி	______	முதியவர்	______
வாய்ப்பு	______	உதவி	______
ஊனம்	______	உறுப்புகள்	______
இளைஞர்	______	தலையாய	______
திறமை	______	மருத்துவம்	______

Youth	Medicine	Help	Opportunity	Disability
Parts	Accident	Importance	Elderly	Ability

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

மாணவன்	பலர்	ஒருத்தி	நுண்ணறிவாளர்
உரிமையாளன்	தாய்	பட்டதாரிகள்	தந்தை
சிற்றன்னை	ஆசிரியை	பெற்றோர்	ஊனமுற்றோர்

ஆண் பால்	பெண் பால்	பலர் பால்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

படிக்கிறாய்	செய்தாய்	வந்தாய்
உதவுகிறேன்	படித்தான்	சிந்தித்தான்
உதவுகின்றாய்	அறிவேன்	படித்தேன்
வாசித்தாய்	கேட்கிறான்	எழுதுவேன்
அறிந்தாய்	உதவுவாள்	செய்தாய்
அழைத்தேன்	எழுதுவாள்	உருவாக்கினாய்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

உதவுதல்	நுண்ணறிவாளர்	வெறுப்பு
நடவடிக்கை	உடல் ஊனம்	சக்கர நாற்காலி

- பின்வரும் பழமொழிகளை விளக்கி எழுதுக.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

ஆழமறிந்து காலை விடு.

கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

கூழானாலும் குளித்துக் குடி.

மனமுண்டானால் இடமுண்டு.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

SAFE PRACTICES - TOBACCO AND ALCOHOL ABUSE
பாதுகாப்பு - புகைப் பிடித்தல் மற்றும் மது அருந்துதலின் தீமைகள்

புகைத்தல்	குடிப்பழக்கம்	மது	போதை
சுவாசப்பை	நுரையீரல்	ஈரல்	இரைப்பை
குடல்	அழற்சி	செலவு	புற்றுநோய்
இருமல்	ஈளை	நடுக்கம்	சண்டை
ஒறுப்பு	உயிர்வளி (O_2)	கரிவளி (CO_2)	பெருவிருப்பு
நுகர்தல்	நேர்ச்சி	மாந்தன்	நாற்றம்
துர்நாற்றம்	எச்சரிக்கை	தொடர்ச்சியான	அகவை (வயது)

புகைப் பிடித்தல், மது அருந்தல் ஆகியன எமக்கு உடல் நல அடிப்படையிலும் குமுக அடிப்படையிலும் தீமைகளை உருவாக்குகின்றன. இந்த தீமைகளை நாம் அறிய வேண்டும். இவற்றில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். பிறரையும் காத்துக் கொள்ள உதவ வேண்டும்.

புகைப் பிடிப்பவரது நுரையீரலின் சிறு அறைகளில் புகை படிகிறது. இதனால் நுரையீரலில் கரி வளி கூடுகிறது. குருதியைத் தூய்மை ஆக்கத் தேவையான உயிர் வளி குறைகிறது. ஆதலால், குருதித் தூய்மை ஆக்கம் பாதிக்கப் படுகிறது. நுரையீரலில் தொற்று ஏற்படுகிறது. இதன் விளைவாக இருமல், ஈளை முதலிய நோய்கள் ஏற்படுகின்றன. நுரையீரல், ஈரல், வயிறு உள்ளிட்ட உறுப்புகளில் புற்றுநோய் உருவாகும் வாய்ப்புக் கூடுகிறது.

புகைப் பிடிப்பதால் குருதிக் குழாய்ச் சுவர்கள் தடிக்கின்றன. இதனால், குருதி செல்லும் அளவு குறைவு அடைகிறது. இது மார்பு அடைப்பு ஏற்பட வாய்ப்பு ஆகிறது. குருதிச் சுற்று ஓட்டம் பாதிப்பு அடைவதால் முழு உடலுக்குமே கேடு உருவாகிறது. புகைப் பிடிக்காதோரை விட, புகைப் பிடிப்போருக்கு மார்பு அடைப்பு வரும் வாய்ப்பு அதிகம் என மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

புகைப் பிடிப்பாளர் தனக்கு மட்டும் அன்றித் தன்னைச் சூழ உள்ளோர்க்கும் தீமை செய்கிறார். வீட்டில் ஒருவர் புகைப்பது, வீட்டில் வாழும் பிறரையும் பாதிக்கிறது. சிறப்பாக, ஏதும் அறியாத சிறாருக்கு ஈளை, இருமல் முதலியவற்றை உருவாக்கிறது. இவை மட்டும் அன்றிப் பணச் செலவு, கெட்ட மணம் வீசுதல் என்பனவும் ஏற்படுகின்றன.

மது அருந்துவதால், இரைப்பை, குடல் ஆகியவற்றில் புண் ஏற்படலாம். குருதி வாந்தி எடுக்கும் நிலை வரலாம். ஈரல் அழற்சி ஏற்படலாம். ஈரல் செயற்பாடு குறையலாம் அல்லது அற்றுப் போகலாம். இதனால், கை, கால் வீக்கம் ஏற்படலாம். ஈரல் புற்றுநோய் வரலாம்.

மது அருந்துவதால் இதயத்தின் செயற்பாடு குறைகிறது. ஆகவே, குருதிச் சுற்றோட்டம் பாதிக்கப்படுகிறது. இது மார்பு அடைப்புக்கு இட்டுச் செல்கிறது. நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிறது. இதனால், கை, கால் நடுக்கம், எழுத முடியாமை, பிடிக்க இயலாமை போன்றவை ஏற்படலாம்.

மது அருந்துவதால், பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. பிள்ளைகளைச் சரியாக வழி நடத்த முடியாத நிலை உருவாகிறது. குடும்பத்தில் சண்டை, முரண்பாடு முதலியன தோன்றுகின்றன. பணம் செலவு ஆகிறது. இதனால், பணச் சிக்கலுக்கு ஆளாக நேரிடுகிறது. குமுகத்தில் மதிப்பு இழக்க வேண்டி வருகிறது. மது அருந்தி விட்டு ஊர்தி ஓட்டுவதால் நேர்ச்சி ஏற்படலாம். இறப்புக்கும் ஆளாகலாம்.

பொது இடங்களில் புகைப் பிடித்தல் மற்றும் மது அருந்தலை அரசு தடை செய்து உள்ளது. அதே போல அகவை பதினெட்டுக்குக் கீழ்ப்பட்டோருக்குப் புகைத்தற் பொருட்கள் மற்றும் மதுவை விற்பதையும் அரசு தடை செய்து உள்ளது. இவற்றை மீறினால் ஒறுப்பு வழங்கப்படும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  தொடர்ச்சியான புகைத்தல், மது அருந்தல் என்பவற்றால் ஏற்படும் குறுகிய, நீண்ட காலப் பாதிப்புகளைப் பற்றிக் கலந்து உரையாடுக.

  இந்தத் தீய பழக்கங்களுக்கு அடிமையான ஒருவரால் அவரது குடும்ப உறுப்பினரும் குமுகத்தினரும் எவ்வாறு பாதிப்படையக் கூடும் என்ற பொருள் பற்றிக் குழுக்களாகச் சேர்ந்து கலந்து உரையாடுக.

  வெண்சுருட்டு (சிகரெட்) விளம்பரங்களில் கூறப்படும் எச்சரிக்கைகள் எவை?

  புகைத்தல், மது அருந்தல் போன்ற பழக்கங்கள் பற்றிய உமது கருத்துகளைக் கடித மூலம் உமது நண்பருக்குத் தெரிவிக்கவும்.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களிலுள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
இருமல்				
எச்சரிக்கை				
அழற்சி				
ஈரல்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
புகைத்தல்			
நுரையீரல்			
நாற்றம்			
சுருட்டு			
எச்சரிக்கை			
புற்றுநோய்			
விற்பனை			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
நுரையீரல்		
ஈரல்		
சுவாசப்பை		
நரம்பு		
நாள்தோறும்		
புகைப்பிடித்தல்		

- ஒத்த சொல் எழுதுக.

நுரையீரல் ________________ குருதி ________________
நற்றுணை ________________ மடல் ________________
நோய் ________________ ஆதி ________________
தீமை ________________ ஒறுப்பு ________________

- எதிர்ச் சொல் எழுதுக.

உள்ளிழுத்தல் ________________ நறுமணம் ________________
வெண்மை ________________ மயக்கம் ________________
விரைவு ________________ அழற்சி ________________
நீண்ட ________________ தீமை ________________

- பன்மைச் சொல் எழுதுக.

நாற்றம் ________________ நோய் ________________
நுரையீரல் ________________ நாகரிகம் ________________
நாடி ________________ சிறுவன் ________________
நரம்பு ________________ தீமை ________________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

__ ரையீரல்	புகை__ லை	ம__
புகைத்__ ல்	புற்று __ ய்	நற்ப __க்கம்
சுவாசப்__ கள்	சுருட்__	ஒறுப்__

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

பெரியோர்	புகைத்தனர்	பரவியது	நோய்
அருந்தினர்	பழகினர்	புகையிலை	உணர்ந்தனர்
நோயாளிகள்	போராடுவோம்	சென்றனர்	சுருட்டு

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

உள்ளிழுத்தல் = ________________ + ________________
புகைப்பிடித்தல் = ________________ + ________________
நோயுற்றனர் = ________________ + ________________
பாதிப்படைந்தனர் = ________________ + ________________
உடலுறுப்புகள் = ________________ + ________________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

மது + அருந்தினர் = ________________
நுரை + ஈரல் = ________________
மூச்சு + திணறல் = ________________
குடி + பழக்கம் = ________________
தடை + ஏற்பட்டது = ________________
புகை + இலை = ________________
போர் + ஆடுவோம் = ________________

- தீ என்ற எழுத்தில் தொடங்கும் ஆறு சொற்கள் எழுதுக.

________________ ________________ ________________
________________ ________________ ________________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

அடிமையாதல்	________	நுகர்தல்	________
புற்றுநோய்	________	பழக்கம்	________
புகைத்தல்	________	எச்சரிக்கை	________
மது	________	விளம்பரம்	________
நுரையீரல்	________	ஒறுப்பு	________

Smoking	Lungs	Alcohol	Addict	Advertisement
Cancer	Punishment	Warning	Habits	Consume

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அவள்	மது	சிறுவன்	குடிமகன்
தலைவி	பணம்	அவன்	சுருட்டு
தலைவன்	அன்னை	ஊர்தி	இல்லாள்

ஆண் பால்	பெண் பால்	ஒன்றன் பால்

- பின்வரும் சொற் தொடர்களில் உள்ள சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

மாறன் புகைப் பிடித்தான்.
அவன் உடல் நலத்தை இழந்தான்.
குடிப் பழக்கம் வாழ்வைக் கெடுத்தது.
குடித்தோர் மானத்தை இழந்தனர்.
மக்கள் சிறுவரைப் பாராட்டினர்.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- எழுவாய், செயப்படுபொருள், பயனிலைக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து சொற் தொடர்கள் உருவாக்குக.

மது	நேர்ச்சி	பழக்கத்தை	பதினெட்டு	
கேடுகளை	செல்வம்	புண்	நுரையீரல்	குடி

புகைப் பிடித்தல் பல ____________ உண்டாக்கும்.

புகைப் பிடித்தல் ____________ நிறுத்துவது மிகவும் கடினம்.

தொடர்ச்சியாகப் புகைப் பிடித்தால் ____________ பாதிப்பு அடையும்.

__________ அருந்துவதால் குடும்பத்தில் சண்டை, சச்சரவு முதலியன தோன்றுகின்றன .

அகவை ____________ க்கு மேற்பட்டோரே புகைப் பிடிக்கலாம் என்ற சட்டம் உண்டு.

மது அருந்துவதால் இரைப்பையில் ______ ஏற்படலாம்.

மது அருந்தி விட்டு ஊர்தி ஓட்டுவதால் ___________ ஏற்படலாம்.

__________ குடியைக் கெடுக்கும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற ____________ .

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

மது	புகைத்தல்	புற்றுநோய்
விற்பனை	எச்சரிக்கை	துன்புறுத்தல்

- பின்வரும் பழமொழிகளை விளக்கி எழுதுக.

குடி குடியைக் கெடுக்கும்.

தன் வினை தன்னைச் சுடும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

PEOPLE HELPING PEOPLE - MULTICULTURAL CONTRIBUTIONS TO CANADIAN SOCIETY
மக்களுக்கு உதவும் மக்கள் - கனடியக் குமுகத்துக்குப் பல் பண்பாட்டுப் பங்களிப்புகள்

மரபு	வெப்பம்	சுடுகலன்	ஆடைகள்
கலை	வளர்ச்சி	மாழை	பொருளாதாரம்
பண்பாடு	சட்டம்	அறிமுகம்	பழங்குடிகள்
நம்பிக்கை	வேட்டை	பயிர்ச்செய்கை	இலக்கியம்
இனக்குழு	பரவுதல்	கல்வி	இறைநெறி
குடியேற்றம்	குடித்தொகை	குமுகம்	நல்வாழ்வு
பங்களிப்பு	குடியமர்வு	அரசியல்	உருமலர்ச்சி

கனடா பல்வேறு இனக் குழுக்கள் இணைந்து வாழும் ஒரு நாடு ஆகும். இன்று கனடாவில் ஏறத்தாழ இருநூறு நாட்டவர் வாழ்கின்றனர். இவர்கள் வேறுபட்ட மொழி, சமயம், பண்பாடு, மரபு, நம்பிக்கை உள்ளிட்ட வாழ்க்கை முறை கொண்டோர் ஆவர். இவர்கள் அனைவரும் தத்தம் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றலாம்; பேணி வளர்க்கலாம். இதனாலேயே கனடாக் குமுகத்தைப் பல்லினப் பண்பாடு கொண்ட குமுகம் என அழைக்கின்றனர்.

கனடாவின் பழங் குடிகள் செவ்விந்தியர் மற்றும் ‘இன்யூட்’ இனத்தவர் ஆவர். பழங் குடிகளை ‘அல்கொங்கியன்’, ‘இரோக்குவா’ என இரு பண்பாட்டுக் குழுக்களாகப் பிரிப்பர். பழங்குடி மக்களே கனடாவுக்குத் தொடக்கப் பண்பாட்டை அளித்தனர். கொடுங் குளிரில் இருந்து தப்பி வாழும் வழிமுறைகளைக் கனடாக் குமுகத்துக்குக் கற்றுக் கொடுத்தோரும் இவர்களே ஆவர்.

குளிரில் இருந்து காத்துக் கொள்ள எவ்வாறு வீடு அமைக்க வேண்டும், வீட்டுக்குள் வெப்பத்தைப் பேண என்ன செய்ய வேண்டும், பயிர்ச் செய்கை எப்படி மேற்கொள்ள வேண்டும், விலங்குகளை எவ்வாறு வேட்டையாடலாம் போன்றவற்றைக் கனடாக் குமுகத்துக்குக் கற்பித்தோர் பழங் குடிகள் ஆவர்.

ஐரோப்பியர் வருமுன்பு, பழங்குடிகள் இன்றைய கனடா முழுவதும் பரவி வாழ்ந்தனர். ஐரோப்பியர் வருகையால் இந்நிலை மாறியது. பழங்குடிகள் வடக்கே ஒதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்கள் இன்று ‘யூக்கோன்’, ‘நுனாவுற்’ மற்றும் வடமேற்கு ஒதுக்கீட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது மக்கட் தொகை ஏறத்தாழ பத்து இலட்சம் ஆகும்.

பதினாறாம் நூற்றாண்டில் பிரான்சியர் கனடாவில் குடியமரத் தொடங்கினர். இதன் விளைவாகப் பிரெஞ்சு மொழி, கத்தோலிக்க சமயம் என்பன கனடாக் குமுகத்துக்கு அறிமுகம் ஆயின. பிரான்சியர் ஆடைகள், சுடுகலன்கள், மாழைகள் முதலியவற்றைக் கனடாக் குமுகத்துக்கு வழங்கினர்.

பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் கனடாவில் குடியமரத் தொடங்கினர். இதன் பெறுபேறாக, ஆங்கில மொழி, புரட்டத்தாந்து சமயம் என்பன கனடிடாக் குமுகத்துக்கு அறிமுகம் ஆயின. ஆங்கிலேயர் நாடாளுமன்ற ஆட்சி முறை, சட்ட ஆக்கம், நீதி, நிருவாகம், வாக்குரிமை முதலியவற்றைக் கனடிடாக் குமுகத்துக்கு அளித்தனர்.

பிரான்சியரும் ஆங்கிலேயரும் கனடாவில் அரசியல், ஆட்சியியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு, இலக்கியம், இறைநெறி, நல்வாழ்வு முதலியவற்றைக் கனடாக் குமுகத்துக்கு வழங்கினர். இதனால், கனடாப் பண்பாட்டுக் கூறுகளில் வளர்ச்சியும் உருமலர்ச்சியும் ஏற்பட்டது.

பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் பின்பு இத்தாலியர், கிரேக்கர், போர்த்துக்கேயர் உள்ளிட்ட ஐரோப்பியர் கனடாவில் குடியமரத் தொடங்கினர். சீனர், இயப்பானியர், இந்தியர், வியட்நாமியர் உள்ளிட்ட ஆசியர் கனடாவுக்கு வரத் தொடங்கினர். ஆபிரிக்கரும் குடியேறத் தொடங்கினர். இங்கு குடியமர்ந்த இனக் குழுக்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் கனடாக் குமுகத்துக்குப் பங்களிப்பை செய்துள்ளன, செய்து வருகின்றன.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

கனடாவுக்குத் தொடக்கப் பண்பாட்டை அளித்தவர் யார்?

எப்பொழுது ஐரோப்பியர் கனடாவில் குடியமரத் தொடங்கினர்?

பிரான்சியர் கனடாக் குமுகத்துக்கு எவற்றை வழங்கினர்?

ஆங்கிலேயர் கனடாக் குமுகத்துக்கு எவற்றை வழங்கினர்?

கனடாப் பழங்குடிமக்கள் எந்தப் பகுதிகளில் வாழ்கின்றனர்?

'பல்லினப் பண்பாடு கொண்ட நாடு' என்றால் என்ன?

கனடாக் குமுகத்தின் பல்லினப் பண்பாட்டால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் பற்றிக் கலந்து உரையாடுக.

கனடாப் பல்லினப் பண்பாட்டில், எண்ணங்கள் பரிமாறப் படுதல் ஒரு முதன்மையான செயற்பாடாகக் கருதப்படுகிறது. இக்கருத்தை ஆசிரியரது உதவியோடு கலந்து உரையாடுக.

கனடாப் பல்லினப் பண்பாட்டில் அன்றும் இன்றும் காணப்படும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்து உரையாடுக.

கனடாவில் தமிழ் நிகழ்ச்சிகளைத் தாங்கி வரும் செய்தி இதழ்கள் யாவை? அவற்றின் பெயர், மற்றும் தொலைபேசி, தொலை நகல்

எண்கள், மின் அஞ்சல், அஞ்சல் முகவரி அடங்கிய பட்டியல் ஒன்று ஆக்குக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
பழங் குடிகள்				
இனக் குழுக்கள்				
பங்களிப்பு				
ஐரோப்பியர்				
மாற்றங்கள்				
பண்பாடு				
குடியமர்வு				
இணைந்து				
ஆங்கிலேயர்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
நாட்டவர்			
பயிர்ச் செய்கை			
வேட்டை			
நம்பிக்கை			
‘அல்கொங்கியன்’			
‘இரோக்கியன்’			
கொடுங் குளிர்			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
குமுகம்		
குழுக்கள்		
வீடுகள்		
தேர்தல் உரிமை		
கத்தோலிக்கம்		
ஆடைகள்		
வேட்டை		

கொடுங்குளிர்		
நாட்டவர்		
‘அல்கொங்கியன்’		

- ஒத்த சொல் எழுதுக.

படிப்பு ஆளுமை சேர்ந்து இல்லம் வேளாண்மை
சமயம் விலங்கு வெப்பம் ஆய்தம் அண்ணளவாக

கல்வி ____________ விலங்குகள் ____________
இறைநெறி ____________ வெப்பம் ____________
இணைந்து ____________ வீடு ____________
ஆட்சியியல் ____________ சுடுகலன் ____________
பயிர்ச்செய்கை____________ ஏறத்தாழ ____________

- எதிர்ச் சொல் எழுதுக.

செல்கை ஓரினம் ஒற்றுமை ஏற்றுமதி
சிறுபான்மை உள் நாடு முடித்தனர் இறங்கினர்

வருகை ____________ தொடங்கினர் ____________
இறக்குமதி____________ பெரும்பான்மை____________
ஏறினர் ____________ பல்லினம் ____________
வேற்றுமை____________ வெளிநாடு ____________

- பன்மைச் சொல் எழுதுக.

பண்பாடு ____________ காலம் ____________
இலக்கியம்____________ குழு ____________
கலை ____________ இனம் ____________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

பண்__டு ஆசி__ர் மா__றம்
ஆபிரி__கர் ஐரோ__பியர் குடி__மர்வு

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

குடித்தொகை குடியமர்ந்தனர் வளர்த்தனர் கற்பித்தனர்
வாழ்கின்றனர் பழங்குடிகள் ஐரோப்பியர் ஆங்கிலேயர்

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக

நூற்றாண்டு	=	______	+	______
குடியேற்றம்	=	______	+	______
வேட்டையாடல்	=	______	+	______
குடியமர்வு	=	______	+	______
பழங்குடிகள்	=	______	+	______

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

பண்பாட்டு	+	அதிர்ச்சி	=	______
வெளி	+	உறவு	=	______
சமூகம்	+	பணி	=	______
இந்த	+	நாட்டில்	=	______
கூட்டு	+	கல்வி	=	______

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

உருமலர்ச்சி	______	இனக் குழு	______
பங்களிப்பு	______	அரசியல்	______
பெரும்பான்மை	______	ஆட்சியியல்	______
குமுகம்	______	சிறுபான்மை	______
வாக்குரிமை	______	மக்களாட்சி	______
நாடாளுமன்றம்	______	இனவாதம்	______

Ethnic Group	Community	Majority	Development
Parliament	Minority	Voting Rights	Contribution
Administration	Politics	Racism	Democracy

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

ஆபிரிக்கர்	செய்தியிதழ்	வானொலி	சுடுகலன்கள்
ஆசியர்	ஆங்கிலேயர்	ஐரோப்பியர்	ஆடைகள்
கத்தோலிக்கர்	நூல்கள்	கிறித்தவன்	மாழை

உயர்திணை	அஃறிணை

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

மாற்றினான் மாற்றினேன் மாற்றினாய்
மாறினேன் மாறினாய் மாறினாள்
அறிந்தான் அறிந்தாய் அறிந்தேன்
வாழ்ந்தேன் வாழ்ந்தாய் வாழ்ந்தான்
போற்றினாள் போற்றினேன் போற்றினாய்
அழித்தேன் அழித்தான் அழித்தாய்
வாழ்த்தினாள் வாழ்த்தினாய் வாழ்த்தினேன்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பொருத்தமான பயனிலைச் சொற்களை எழுதுக.

பின்பற்றுகின்றனர் தள்ளப்பட்டனர் ஏற்பட்டது
பரப்பினர் வாழ்கின்றனர் புகுத்தினர்

கனடாவில் பல்லின மக்கள் ______________________ .
பிரான்சியர் கத்தோலிக்க சமயத்தைப் ______________________ .
கனடா மக்கள் பல்லினப் பண்பாட்டைப் ______________________ .
பழங்குடியினர் கனடாவில் வடமேற்கே ______________________ .
ஐரோப்பியர் வரவால் பழங் குடிகள் வாழ்வில் மாற்றம்______________ .
ஆங்கிலேயர் நாடாளுமன்ற முறையைப் ______________________ .

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

பொருளாதாரம் பண்பாடு ஆட்சி முறை
மாற்றங்கள் கல்வி இலக்கியம்
பழங் குடிகள் வாக்குரிமை பங்களிப்பு

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

FOOD - TABLE ETIQUETTE
உணவு - பண்பாக உண்ணல்

நற்பழக்கம்	சோறு	சாப்பாடு	உணவு
விருந்தோம்பல்	விருந்தினர்	தொழிற்கூடம்	அலுவலகம்
சிற்றுண்டிச்சாலை	வாய்ப்பு	சூழ்நிலை	இன்முகம்
பரிமாறல்	உட்கொளல்	பகிர்தல்	வற்புறுத்தல்
அவை	கறி	குவளை	உணா
வாழையிலை	ஊண்	உண்டி	உண்ணல்

உணவு, உண்டி, ஊண், உணா, சாப்பாடு என்பவை ஒத்த பொருள் தருவன. உணவை உண்ணும் வேளையில், நாம் சில ஒழுங்கு முறைகளைக் கடைப் பிடித்தல் நன்று. நாம் தனித்து உண்ணாது, பிறருக்கும் கொடுத்து உண்ணல் வேண்டும். விருந்தோம்பலை ஒரு மகிழ்ச்சியான நிகழ்வாக மாற்றி அமைத்தல் வேண்டும்.

நாம் பல்லின மக்கள் வாழும் கனடாவில் வாழ்கிறோம். தொழிலகங்கள், அலுவலகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் போன்றவற்றில் பல்லின மக்களோடு பழக வேண்டி உள்ளது. வெளியே பிற இன நண்பரோடு சேர்ந்து உணவு உண்ண வேண்டிய தேவைகளும் ஏற்படுவது உண்டு. இதனால், நாம் மேலை நாட்டார் உணவு உண்ணும் முறைகளை அறிதல் நன்று. தேவைக்கு ஏற்ப கரண்டி, முள்ளுக் கரண்டி, கத்தி, குச்சிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி உண்ணப் பழக வேண்டும்.

பிறர் விரும்பாத முறையில் நாம் உணவு உண்பதை விலக்கல் வேண்டும். உணவுகளைக் கொட்டிச் சிந்தாமல், கவனத்தோடு பரிமாற வேண்டும். பேசிக்கொண்டு உண்ணல் நன்று அன்று. உணவை வாயினுள் நிரம்ப வைத்து உண்ணல் தகாது. நன்றாகப் பிசைந்தபடி உண்பதையும் தவிர்த்தல் நன்று.

கனடா வாழ் தமிழ் மக்கள் தமது இல்லங்களில், விருந்தினரை வரவேற்கும் பொழுது தமிழ்ப் பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வருகின்றனர். எனவே மாணவர் தமிழரது விருந்தோம்பலையும் பிற இனத்தவரது விருந்தோம்பலையும் அறிந்திருக்க வேண்டும்.

வீட்டுக்கு வரும் விருந்தினரை நாம் உவகையுடன் வரவேற்க வேண்டும். விருந்தினர் மகிழ்வடையும் வகையில் வீட்டைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்தல் நன்று. விருந்தினரது விருப்பு வெறுப்புகளை அறிந்து அதற்கு இணங்க பல் வகை உணவுகளை ஆக்கல் வேண்டும். உணவு பரிமாறும் பொழுது இன் முகத்தோடு பரிமாறல் வேண்டும். விருந்தினரோடு சேர்ந்து உண்ணலும் நன்று. விருந்தினர் உண்ட பின் எழுதலே நற் பண்பாகும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  பண்பான முறையில் உணவு உண்ணல் என்றால் என்ன?

  சூழ்நிலைக்கு ஏற்ப உணவு உண்ணும் ஒழுங்கு முறைகள் எனும் பொருள் பற்றிக் கலந்து உரையாடுக.

  'விருந்தோம்பல்' என்றால் என்ன?

  கனடாவிலும் ஈழ நாட்டிலும் தமிழரது சிறப்பு நிகழ்ச்சிகளில் உணவு பரிமாறும் முறை பற்றிக் கலந்து உரையாடுக.

  விருந்தினரை வரவேற்கும் முறை பற்றி எழுதுக.

  இயப்பானியரது விருந்தோம்பலையும் தமிழரது விருந்தோம்பலையும் ஒப்பிட்டுக் கலந்து உரையாடுக.

  ஐரோப்பியர் வருகையின் முன்னும் பின்னும் தமிழரது விருந்தோம்பல், பரிமாறும் முறைகள், கருவிகள், முதலியவை பற்றி ஆசிரியரது உதவியோடு கலந்து உரையாடுக. கலந்துரையாடலில் இருந்து நீர் அறிந்தவற்றை எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உணவு				
வாழ்கின்றோம்				
அவை				
குவளை				
வரவேற்றல்				
உண்டி				
விருந்தாளி				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களிலுள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
உண்டி			
பந்தி			
விருந்தோம்பல்			
விருந்தினர்			
பண்பாடு			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
கூழ்		
ஊண்		
இல்லாள்		
உணா		
சிந்துதல்		
வாழையிலை		
இன் முகம்		
வரவேற்பு		

- ஒத்த சொல் எழுதுக.

உணவு ______ சிறந்த ______
அவை ______ வன்சொல் ______
சேர்தல் ______ சுவை ______
இல்லம் ______ உவகை ______

- எதிர்ச் சொல் எழுதுக.

இன்சொல் ______ ஒற்றுமை ______
தூய்மை ______ இன்னல் ______
நண்பன் ______ நன்மை ______

- பன்மைச் சொல் எழுதுக.

குவளை ______ சிற்றுண்டி ______
பழக்கம் ______ குச்சி ______
கறி ______ உணவு ______
அலுவலகம் ______ நண்பன் ______
கருவி ______ குடம் ______
பானை ______ கலம் ______

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

வாழை__லை விருந்__ ளி இன் __கம்
தொழி__ கம் குவ __ க __ம்
ஐ __ப்பியர் உ__ டி ப__மாறல்
உண் __ ல் ஓ__ ங்கு பகிர்__ ல்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

உறுபசி	சுவைமிகு	மிகநல்ல	நனிசுவை	ஏனெனில்
ஒப்ப	களிவிருந்து	போல	அன்ன	ஆதலால்

இடைச் சொல்	உரிச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

வாழையிலை = ______ + ______
விருந்தோம்பல் = ______ + ______
மட்பானை = ______ + ______
நற்பழக்கம் = ______ + ______
பழக்கவழக்கம் = ______ + ______
தொழிற்கூடம் = ______ + ______

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

உப்பு + இட்டவரை = ______
தேங்காய் + சிரட்டை = ______
கறி + சட்டி = ______
இடம் + கை = ______
பால் + அப்பம் = ______
வலம் + கை = ______

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

விருந்தினர் ______ வாய்ப்பு ______
பழக்கம் ______ சிற்றுண்டி ______
விருந்தோம்பல் ______ பண்பாடு ______
தூய்மை ______ அழகு ______

Purity Guests Habit Chance
Beauty Culture Snack Hospitality

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அலுவலகம் கத்திகள் மட்பானை இல்லம் அவை
உணவுகள் பழங்கள் அகப்பைகள் கரண்டிகள் குவளை

ஒன்றன் பால்	பலவின் பால்

- பின்வரும் சொற் தொடர்களிலுள்ள சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அம்மா உணவு சமைத்தார்.
மாறன் உணவை உண்டான்.
உமையாள் உண்டி பரிமாறினாள்.
சேரன் பாயாசம் குடித்தான்.
நங்கை பொரியல் பொரித்தாள்.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

வாழையிலை அகப்பை சுவை
விருந்தினர் விருந்தோம்பல் உண்டி

- காகம் உணவைப் பகிர்ந்து உண்ணும் சிறந்த பண்பினை உடைய பறவை ஆகும். ஏன் அவ்வாறு கூறப்படுகிறது என்பதை விளக்கி எழுதுக.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

ANIMALS - PRESERVATION AND PROTECTION
விலங்குகள் - விலங்குகளைப் பேணலும் காத்தலும்

விலங்கு	வனம்	காப்பு	வேட்டை
போக்குவரத்து	பயிர்ச்செய்கை	வேதியியல்	உயிர்க்கொல்லி
மாசடைதல்	நீர் நிலைகள்	நச்சுப்புகை	அழிந்தன
புவியதிர்ச்சி	தீப்பற்றுதல்	எரிமலை	வெள்ளப்பெருக்கு
அறிவியல்	மருத்துவர்	ஆய்வு	ஆராய்ச்சி
பற்றாளர்	வட்டாரம்	இனப்பெருக்கம்	வனப்பு

இவ்வுலகில் பல்வேறு விலங்குகள் வெவ்வேறு ஏதுக்களால் அழிக்கப்பட்டன. இன்றும் அழிக்கப்பட்டு வருகின்றன. மாந்தன் வேட்டையாடி விலங்குகளைக் கொன்றான். அவனது தேவைகள் அதிகரிப்பினால் காடுகளை அழித்தான். நீண்ட போக்குவரத்துப் பாதைகளை அமைத்தான். கைத் தொழில், பயிர்ச் செய்கை முதலிய செயல்களில் ஈடுபடத் தொடங்கினான்.

வேதியற் கலவை, உயிர்க் கொல்லி, போர், அணுக் குண்டு, நச்சுப் புகை நிலநெய் மாசு போன்றவற்றால் சூழலை மாசு அடையச் செய்தான். இத்தகைய சூழலுக்கு ஈடுகொடுத்து வாழ முடியாத விலங்குகள் காலப் போக்கில் அழியத் தொடங்கின. இயற்கை ஏதுக்களான நில நடுக்கம், எரி மலை வெடிப்பு, தொடர் பனி வீழ்ச்சி, வறட்சி, தீப் பற்றுதல், வெள்ளப் பெருக்கு போன்றவையும் விலங்கினம் அழிவதற்கு ஏதுக்களாக அமைந்தன.

மாந்தன், மருந்து வகைகளைக் கண்டு பிடிப்பதற்கும், மருத்துவ அறிவியல் ஆய்வுக்கும், விண்வெளி ஆய்வுக்கும் விலங்குகளைப் பயன்படுத்துகிறான். பொது அறிவு வளர்ச்சியால் மாந்தன், விலங்குகளின் அழிவை உணரத் தொடங்கியுள்ளான். இதனால் மாந்தன் விலங்குக் பற்றாளன் ஆகி உள்ளான். எனவே விலங்குப் காப்பு நடவடிக்கைகள் உலகளவில் எடுக்கப்பட்டுள்ளன.

இன்று பல நாடுகள் விலங்குக் காப்பரண்களை அமைத்துள்ளன. வேறு சில நாடுகள் விலங்குக் காப்புச் சட்டங்களை இயற்றி உள்ளன. சில விலங்குகள் அழிந்து போகும் நிலையில் உள்ளன. இவற்றை இனப் பெருக்கம் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய செயற்பாடுகளால் விலங்குகளை மட்டுமன்றி இயற்கைக் காடுகளின் வனப்பையும் பேணிக் காக்கலாம் என்பதில் ஐயம் இல்லை.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  விலங்கினம் அழிவதற்கு உரிய ஏதுக்கள் யாவை?

  காடுகள் ஏன் அழிக்கப்படுகின்றன?

  விலங்குக் காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ள உலக அமைப்புகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் ஆராய்ந்து அறிக.

அமெரிக்காவிலுள்ள பவலோ மாட்டினம், துருவக் கரடிகள், உறொக்கி மலைச் சாரல் ஆட்டினம், சாம்பல் நிறத் திமிங்கிலம், 'சீல்' மீனினம், 'பென்குயின்' பறவைகள் போன்றவற்றின் அழிவுக்கு உரிய ஏதுக்களை விளக்குக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
அழித்தல்				
வனம்				
இயற்கை				
திமிங்கிலம்				
அஃது				
காப்பு				
பேணுதல்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
பயிர்ச் செய்கை			
வனப்பு			
நலன் விரும்பி			
பகுதி			
பூங்கா			
வன விலங்கு			
பொறிக் கிடங்கு			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
எரி மலை		
பேரிடர்		
ஏதுக்கள்		
மேற்கொள்ளல்		
முடிவு		
பற்றாளன்		
காடுகள்		

- ஒத்த சொல் எழுதுக.

வனம்	________	வனப்பு	________
இறப்பு	________	தீ	________
மாந்தன்	________	மாசு	________
பாதை	________	பேரிடர்	________

- எதிர்ச் சொல் எழுதுக.

வனப்பு	________	கொடிய	________
நிறைவு	________	இறப்பு	________
விருப்பு	________	இயற்கை	________

- பன்மைச் சொல் எழுதுக.

இனம்	________	வனம்	________
பகுதி	________	மனிதன்	________
காரணம்	________	பொருள்	________
ஆய்வு	________	வதிவிடம்	________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

__ ணுக் குண்டு	விலங்__ னம்	வ__ ங்கள்
போக்குவ__ த்து	மாச__ தல்	பொறிக் கி__ ங்கு
வ__ ட்சி	புவியதி__ ச்சி	எ__ மலை
திமி__ கிலம்	பற்றா__ ர்	நச்சுப் __ கை

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

பொறிக்கிடங்கு	காடு	அழிந்தன	பாதைகள்
பயிரிட்டனர்	கொன்றனர்	பற்றாளர்	உயிர்க்கொல்லி
ஈடுபட்டனர்	அரசு	மடிந்தன	விலங்குகள்
கவர்ந்தன	திமிங்கிலம்	எரிமலை	அசைந்தன

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

பொறிக்கிடங்கு = ______________ + ______________
விலங்குப்பற்றாளர் = ______________ + ______________
நீர்நிலை = ______________ + ______________
நிலநடுக்கம் = ______________ + ______________
பயிரிட்டனர் = ______________ + ______________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

தீ + பற்றியது = ______________
வனம் + விலங்கு = ______________
வேட்டை + ஆடுதல் = ______________
சட்டம் + திட்டம் = ______________
வெள்ளம் + பெருக்கு = ______________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

விலங்குகள் __________ நிலநடுக்கம் __________
வனம் __________ ஆராய்ச்சி __________
வேட்டை __________ அறிவியல் __________
மருந்து __________ வெள்ளப் பெருக்கு __________

Animals Forest Hunting Earthquake
Medicine Research Science Flood

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

காடுகள் விலங்குகள் பற்றாளர்
மனிதர் வேட்டைக்காரர் வாவிகள்
மருத்துவர் அறிவியலாளர தந்தங்கள்
துருவக் கரடிகள் அவை அவர்கள்

பலர் பால்	பலவின் பால்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அழித்தாய்	ஆக்கினேன்	கொன்றனர்	முயன்றேன்
இரங்கினாய்	கொடுத்தாய்	பயிரிட்டனர்	விதித்தனர்
கடைப்பிடித்தேன்	கருதினாய்	அழித்தான்	ஈடுபட்டாய்
ஆராய்ந்தான்	மகிழ்ந்தேன்	காப்பாற்றினேன்	தெரிவித்தாய்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

மாந்தன் விலங்குகளைக் கொன்றான்.
உழவர் காட்டை அழித்தனர்.
பேரிடர்கள் விலங்குகளைக் கொன்றன.
அரசுகள் சட்டங்களை இயற்றின.
விலங்குகள் விண்வெளிக்குச் சென்றன.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற் தொடர்களைச் சரியான சொல் வைத்து நிரப்புக.

மனிதனால் காடுகள் _____ க்கப்பட்டன. (அளி/அழி)

நச்சுப் புகையினால் _____மண்டலம் மாசு அடைகிறது.(வழி/வளி)

ஈட்டி, அம்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட விலங்கினம் பொறுக்க முடியாத _____யால் துடித்து இறந்தன. (வளி/வலி)

ஓநாய்களின் ஊளை _____யைக் கேட்க விரும்பாத மக்கள் அவற்றைக் கொன்று குவித்தனர். (ஒளி/ஒலி)

விலை உயர்ந்த தந்தங்களுக்காக யானைகள் _____க்கப்பட்டன. (அளி/அழி)

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

பேணுதல்	காத்தல்	தீயணைத்தல்
பயிர்ச் செய்கை	துருவக் கரடி	நில நெய்

- பின்வரும் பழமொழிகளை விளக்கி எழுதுக.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

பேராசை பெருங் கேடு.

- அழிந்து போகும் நிலையில் உள்ள விலங்குகள் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

THE WORLD OF WORK - LOOKING AND APPLYING FOR A JOB
தொழில் - வேலை தேடலும் விண்ணப்பித்தலும்

உணவு	சந்தை	மொழியறிவு	வலைப்பின்னல்
உடை	நடுவம்	கல்வியறிவு	தொடர்வலை
உறைவிடம்	விளம்பரம்	பட்டறிவு	தொலைபேசி
பணம்	முயற்சி	வினைத்திறன்	செய்தி
இதழ்	பணம்	ஊதியம்	பின்பற்றல்
ஆண்டறிக்கை	வேலை	அடிப்படை	விண்ணப்பம்
தன்மதிப்பீடு	தேடல்	ஆய்தல்	நேர்காணல்

நாம் வாழ உணவு, உடை, உறைவிடம் என்பன தேவையாகும். இவையின்றி நாம் வாழ முடியாது. இவற்றைப் பெறப் பணம் தேவை; பணம் இன்றி இவற்றைப் பெற முடியாது. இதை எண்ணியே ‘பணம் இல்லாதவன் பிணம்’ என்றனர். பணம் பெற வேலை செய்ய வேண்டும். வேலை செய்யாமல் பணம் கிடைக்காது. ஆகவே, வேலையைத் தேடுவது எப்படி என்பதை இங்கே பார்ப்போம்.

வேலை தேட மொழியறிவு, கல்வியறிவு, பட்டறிவு, வினைத் திறன் என்பன அடிப்படைத் தேவைகள் ஆகும். ஆங்கிலமும் பிரெஞ்சும் கனடாவின் ஆட்சி மொழிகள் ஆகும். இவற்றில் அறிவு இருப்பது வேலை தேடலை எளிது ஆக்கும். மேலும் அரசுப் பணிகளையும் கூடிய ஊதியம் உள்ள வேலைகளையும் பெற உதவும். நாம் விரும்பும் வேலையைப் பெற, அவ் வேலை சார்ந்த கல்வி அறிவும் வினைத் திறனும் எம்மிடம் இருக்க வேண்டும். இவற்றைக் கல்வி மற்றும் பயிற்சி வழியாகப் பெறலாம். வேலை தேட இவை மட்டும் போதாது. நாம் விரும்பும் வேலை தொடர்பான பட்டறிவும் தேவை ஆகும். இதைத் தொண்டு வேலை மற்றும் கூட்டுக் கல்வி வாயிலாகப் பெறலாம்.

வேலை தேடலில் எட்டு நிலைகள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. தொழிற் சந்தையை அறிதல்
2. தன் மதிப்பீடு செய்தல்
3. தன் விவரக் குறிப்புப் புனைதல்
4. வேலை தருநர் பட்டியல் ஆக்கல்
5. வேலை விண்ணப்பங்கள் கொடுத்தல்
6. நேர் காணலுக்கு அழைக்கும் அமைப்பை ஆய்தல்
7. நேர் காணலைச் செம்மையாக ஆற்றல்
8. பணிக்கு அமர்த்தும் கடிதம் பெறல்

கனடாவில் வேலை தேடுவதற்கு, வலைப் பின்னல், தொடர் வலை, வேலை நடுவம், செய்தியிதழ், தொலை பேசி அழைப்பு, மஞ்சள் பக்கம், தொழில் சார் அமைப்புகள், உள்ளக விளம்பரப் பலகை, உள்ளூர் குமுகப் பணி நடுவங்கள், தொழில் வணிக ஏடுகள், வேலை முகவர், மூன்றடி முறை, சென்று பார்த்தல், புதிய கட்டடம் கட்டும் இடங்கள், ஆண்டறிக்கை, சமயம்,

பண்பாடு மற்றும் பொழுது போக்கு அமைப்புகள் எனப் பதினாறு வழிமுறைகள் உள்ளன. கனடாவில் 85% வேலைகள் வலைப் பின்னல் முறை வழியாகவே கிடைக்கின்றன. எனவே, வேலை தேடுவோர் இதில் கூடுதல் கவனம் செலுத்தல் வேண்டும்.

இதுவரை, வேலை தேடும் அடிப்படைத் தேவைகளையும், எட்டுப்படி நிலைகளையும், பதினாறு வழிமுறைகளையும் பார்த்தோம். வேலை கிடைப்பதற்கு இவை மட்டும் போதாது. தொடர்ச்சியான முயற்சியும் தேவை ஆகும். வேலை தேடுவது ஒரு முழு நேர வேலை என்பதை நினைவிற் கொண்டு இடைவிடாத முயற்சி செய்தால் மட்டுமே நாம் விரும்பும் வேலையை விரைவில் பெறலாம்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

  வேலை தேடுவது எத்தனை நிலைகளைக் கொண்டது?

  கனடாவில் வேலை தேடுவதற்கு எத்தனை வழிமுறைகள் உள்ளன?

  வேலை தேட அடிப்படையானவை யாவை?

  கனடாவின் ஆட்சி மொழிகள் யாவை?

  தொழில் நிறுவனங்கள் தமது விண்ணப்பப் படிவங்களில் அறிய விரும்பும், விரும்பாத விவரங்களைப் பற்றி வகுப்பில் கலந்து உரையாடுக.

  வகுப்பில் ஆசிரியரால் தரப்பட்ட மாதிரி வேலை விண்ணப்பம் (Job Application) ஒன்றை நிரப்புக.

  செய்தி இதழில் விளம்பரம் செய்யப்பட்ட வேலை ஒன்றுக்கு விண்ணப்பம் அனுப்புவதற்கு உரிய மாதிரித் தன் விவரக் குறிப்பு ஒன்று (Resume) ஆக்குக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உறைவிடம்				
ஊதியம்				
அடிப்படை				
ஆய்தல்				
ஆண்டறிக்கை				
தொலை பேசி				
செய்தி இதழ்				
அஃதாவது				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
பின்பற்றல்			
வலைப் பின்னல்			
வினைத் திறன்			
விண்ணப்பம்			
பட்டறிவு			
நேர் காணல்			
சந்தை			
விளம்பரம்			
பார்த்தல்			
ஆற்றல்			

- பின்வரும் சொற்களை குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
நேர் காணல்		
விண்ணப்பம்		
ஆற்றல்		
பட்டறிவு		
வேலை வாய்ப்பு		
பணம்		
வலைப் பின்னல்		

- ஒத்த சொல் எழுதுக.

பணி ஊக்கம் படிப்பு அதிகம் வீடு
படிகள் அங்காடி ஊண் செவ்வி ஆடை

உணவு ______________ சந்தை ______________
உடை ______________ நேர் காணல் ______________
உறைவிடம் ______________ கூடுதல் ______________
வேலை ______________ கல்வி ______________
நிலைகள் ______________ முயற்சி ______________

- எதிர்ச் சொல் எழுதுக.

சுருக்குதல் மெதுவாக சோம்பல் வெறுப்பு பல
குறைதல் தாழ்வு மறதி பழைய தீது

விரைவாக	__________	புதிய	__________
சுறுசுறுப்பு	__________	கூடுதல்	__________
விருப்பு	__________	உயர்வு	__________
பெருக்குதல்	__________	நினைவு	__________
சில	__________	நன்று	__________

- பன்மைச் சொல் எழுதுக.

தகைமை	__________	வெற்றிடம்	__________
திறன்	__________	விண்ணப்பம்	__________
நிலையம்	__________	பட்டறிவு	__________
வாய்ப்பு	__________	செய்தியிதழ்	__________
விளம்பரம்	__________	விளக்கம்	__________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

தேடு__ர்	வெற்றி__ங்கள்	விண்__ப்பித்தல்
தொட__வலை	நேர் கா__ல்	அ__ப்__டை
கல்__யறிவு	த__மை	பட்ட__வு

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	பெயர்	வினை	இடை	உரி
பணம்				
முடியாது				
பார்ப்போம்				
நடுவம்				
ஆதலால்				
மேலும்				
எனவே				
சாலவும்				
வேலை				
என்றனர்				
அங்காடி				

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

வலைப்பின்னல்	=	__________	+	__________
நான்காவது	=	__________	+	__________
விண்ணப்பப்படிவம்	=	__________	+	__________
தொழிற்சந்தை	=	__________	+	__________
ஆண்டறிக்கை	=	__________	+	__________
விளம்பரப்பலகை	=	__________	+	__________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

கல்வி + அறிவு = ______________
மொழி + அறிவு = ______________
உறைவு + இடம் = ______________
விவரம் + குறிப்பு = ______________
நினைவில்+ கொண்டு = ______________
செய்தி + இதழ் = ______________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

வேலை தேடல்____________
தொழிற் சந்தை____________
தன் மதிப்பீடு ____________
வேலை தருநர்____________
நேர்காணல் ____________
வினைத்திறன் ____________
கல்வி ____________

வலைப் பின்னல்__________
தொடர் வலை ____________
செய்தி இதழ் ____________
மஞ்சள் பக்கங்கள்____________
விண்ணப்பம் ____________
பட்டறிவு ____________
தன் விவரக் குறிப்பு________

Experience Interview Employer Skills
Labor Market Application Self-Assessment Internet
Education Newspaper Yellow Pages Network
Job Search Resume

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

பாவலன் பாடகி ஆசிரியை மருத்துவன்
சிறுவன் மாணவி மாணவன் மனைவி

ஆண் பால்	பெண் பால்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அனுப்பினான் அழித்தாய் நிரப்பினேன்
வாசித்தாய் அறிந்தேன் சென்றான்
செய்தேன் உணர்ந்தாய் கருதினான்
கடந்தான் உயர்ந்தான் மறந்தாய்
மதித்தான் முடித்தேன் தேடினாய்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- கீறிட்ட இடங்களில் சரியான சொல்லை வைத்து நிரப்புக.

  __________ வாழ்க்கைக்குத் துணையாக அமைகின்றது. (தொழில், தொளில்)

  நாம் வேலைக்கு __________ வேண்டும். (வின்னப்பிக்க, விண்ணப்பிக்க)

  வேலை வெற்றிட __________ செய்தியிதழ்களில் வருவதுண்டு. (விழம்பரங்கள், விளம்பரங்கள்)

  வேலை __________ தனக்குரிய வேலைத் தகைமைகளை முதலில் தேடிக் கொள்ள வேண்டும். (தேடுனர், தேடுநர்)

  தொண்டு வேலை, கூட்டுக் கல்வி முதலியவற்றின் மூலம் கனடாப் __________ பெற்றுக் கொள்ளலாம். (பட்டரிவைப், பட்டறிவைப்)

  தொழில் புரியாது திரிபவன் __________ ஆவான். (சோம்பேறி, சோம்பேரி)

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

வேலை	குமுகாயம்	முயற்சி	விளம்பரம்
சந்தை	மொழி	கல்வி	அடிப்படை

- பின்வரும் பழமொழிகளுக்கு விளக்கம் கூறுக.

  ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
  ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும்.
  காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

UNDERSTANDING CHANGES - HISTORY OF SRI LANKA
மாற்றங்களை அறிந்து கொள்ளல் - இலங்கை வரலாறு

தீவு	பரப்பு	விடுதலை	புலப்பெயர்வு
இயக்கர்	மொழி	அறவழி	குடியேற்றம்
நாகர்	போர்	மறவழி	ஆட்சிமொழி
தமிழர்	ஏதிலி	தலைநகர்	செல்வாக்கு
சிங்களவர்	சைவம்	மாகடல்	ஐரோப்பியர்
பறங்கியர்	பௌத்தம்	இணைப்பு	அரேபியர்
இசுலாமியர்	உரிமை	நடுஅரசு	இனக்குழு
நாடு	ஆய்வாளர்	மாநிலஅரசு	நெடுங்காலம்

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பெற்ற ஒரு தீவு ஆகும். இலங்கை இந்தியாவுக்குத் தெற்கே, இந்து மா கடலில் அமைந்துள்ளது. இஃது இந்தியாவோடு இணைந்து இருந்தது: கடற் கோளால் பிரிந்து தனித் தீவு ஆனது என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இதன் பரப்பளவு 65,610 சதுரக் கிலோ மீற்றர் ஆகும்.

இத்தீவு தாமிரபரணி, சேரன்தீவு, ஈழம், இலங்கை எனத் தமிழிலும் இரத்தின துவீபம், இலங்கா, சிறீலங்கா எனச் சிங்களத்திலும் செரண்டிப், தப்பிரபேன், சைலோன், சிலோன் என ஐரோப்பிய மொழிகளிலும் அழைக்கப்பெற்று வந்துள்ளது.

இயக்கர், நாகர் என்போர் இத் தீவின் பழங் குடிகள் ஆவர். இயக்கர், நாகர் வழி வந்தோரே தமிழர் ஆவர். கி.மு 500ஆம் ஆண்டளவில் வட இந்தியாவில் இருந்து வேறு ஓர் இனக் குழு இத்தீவில் குடியேறியது. குடியேறியோரும் பழங் குடிகளும் கலந்தனர். இதன் விளைவாகப் புதிய இனம் தோன்றியது. இதுவே சிங்கள இனம் என்று அறிஞர் கூறுவர்.

கி.பி 1505ஆம் ஆண்டில் ஐரோப்பியர் இலங்கைக்கு வந்தனர். அதுவரையில் இத்தீவில் தமிழருக்கும் சிங்களவருக்கும் தனித் தனி அரசுகள் இருந்தன. ஐரோப்பியர் வந்த பொழுது யாழ்ப்பாண அரசு, வன்னி அரசு என்ற இரண்டு தமிழ் அரசுகள் இருந்தன. கோட்டை அரசு, கண்டி அரசு என்ற இரண்டு சிங்கள அரசுகள் இருந்தன.

கி.பி 1597ஆம் ஆண்டு கோட்டை அரசு போர்த்துக்கேயர் கைக்குப் போனது. கி.பி 1619ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினர். கி.பி 1658ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்டம் இருந்த ஆட்சி உரிமை ஒல்லாந்தர் கைக்கு மாறியது. 1802ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடம் இருந்த அரசை ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1811ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் வன்னி அரசைக் கைப்பற்றினர். கி.பி 1815ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கண்டி அரசைக் கைப்பற்றினர். 1833ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் மேற்படி அரசுகளை இணைத்து ஒரு நாடாக்கினர். இதுவே இன்று நாம் காணும் இலங்கை ஆகும்.

ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் சில ஐரோப்பியர் சில இலங்கையரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். இதன் விளைவாகப் பறங்கியர் என்ற சிற்றினம் தோன்றிற்று. இன்றும் இலங்கையில் குறிப்பிட்ட அளவு பறங்கியர் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை 1948ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற்றது. இதன் பின் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழரது உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்தன. இதற்கு எதிராகத் தமிழர் அறவழிப் போர் நடத்தினர். அறவழிப் போரை இலங்கை அரசு ஆய்த முனையில் அடக்கியது. இதனால் தமிழரும் மறவழிப் போரில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக கடந்த இருபது ஆண்டுகளாக இலங்கையில் போர் நடைபெற்று வருகிறது. இதனால் பத்து இலக்கம் தமிழர் ஏதிலியர் ஆகினர். எட்டு இலக்கம் தமிழர் வெளி நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். நாம் கனடாவுக்கு வந்துள்ளோம். வேறு பலர் வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கையில் வாழும் தமிழர் நீண்ட காலமாகச் சைவ சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். சிங்களவர் நெடுங் காலமாகப் பௌத்த சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். ஐரோப்பியச் செல்வாக்கால் ஒரு பகுதி மக்கள் கிறித்தவ சமயத்திற்கு மாறியுள்ளனர். அரேபியச் செல்வாக்கால் ஒரு பகுதி மக்கள் இசுலாம் மதத்தவராயும் உள்ளனர்.

இன்று இலங்கை மக்களில் பௌத்தர் 70%, சைவர் 15%, கிறித்தவர் 8%, இசுலாமியர் 7% ஆவர். மொழி அடிப்படையில் 75% சிங்களம் பேசுகின்றனர், 25% தமிழ் பேசுகின்றனர். இலங்கையின் மக்கள் தொகை 1.9 கோடி ஆகும். எழுத வாசிக்கத் தெரிந்தோர் 90% ஆகும்.

இன்று இலங்கையில் ஒரு நடு அரசும், எட்டு மாநில அரசுகளும் உள்ளன. சிங்களம், தமிழ் ஆகியன இலங்கையின் ஆட்சி மொழிகள் ஆகும். இலங்கையின் தலை நகர் கொழும்பு ஆகும். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி, அநுராதபுரம் முதலியன பிற பெரிய நகர்கள் ஆகும். இலங்கையின் வடகிழக்கில் தமிழர் நெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றனர். தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சிங்களவர் வாழ்ந்து வருகின்றனர்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

ஐரோப்பியர் வரும் பொழுது இலங்கையில் இருந்த தமிழ், சிங்கள அரசுகள் எவை?

ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் இலங்கையில் இடம் பெற்ற மாற்றங்கள் எவை?

இலங்கையின் அமைவிடம், தரையமைப்பு, மக்கள், பண்பாடு, சமயம் ஆகியவற்றைப் பற்றிக் கலந்து உரையாடுக.

கனடா, இலங்கை ஆகிய இரு நாடுகளின் அமைவிடங்கள், தரையமைப்பு, குடித் தொகை, அன்றும் இன்றும் வாழ்ந்த, வாழ்கின்ற இனத்தவர் போன்றவற்றை ஒப்பிட்டுக் கலந்து உரையாடுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
இலங்கை				
ஈழம்				
ஐரோப்பியர்				
ஒல்லாந்தர்				
ஆங்கிலேயர்				
பறங்கியர்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
ஆய்வாளர்			
இயக்கர்			
நாகர்			
ஐரோப்பியர்			
நெடுங் காலம்			
ஆண்டுகள்			
ஐரோப்பியர்			
ஆங்கிலேயர்			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
நாகர்		
கோட்டை		
வன்னி		
தீவு		
இலங்கை		
ஈழம்		
பறங்கியர்		

- ஒத்த சொல் எழுதுக.

நீண்டகாலம்	பட்டம்	அறவழி	நாடு	பாதை
மதம்	சமர்	சேர்ந்து	உறைதல்	ஈழம்

இலங்கை	______	இணைந்து	______
நெடுங்காலம்	______	அமைதிவழி	______
வழி	______	சமயம்	______
வாழ்தல்	______	நகர்	______
அரசு	______	போர்	______

- எதிர்ச் சொல் எழுதுக.

சேர்ந்தது	மறைந்தது	முன்னர்	போனோம்	குறுங் காலம்
மறம்	நேற்று	வந்தது	நண்பர்	குடிப் பெயர்வு

தோன்றியது	______	எதிரி	______
வந்தோம்	______	போனது	______
பிரிந்தது	______	அறம்	______
குடியேற்றம்	______	இன்று	______
நெடுங்காலம்	______	பின்னர்	______

- பன்மைச் சொல் எழுதுக.

குடியேற்றம்	______	தீவு	______
காலம்	______	தலைமுறை	______
ஏதிலி	______	மொழி	______
இல்லம்	______	தமிழன்	______
மாநிலம்	______	நகரம்	______

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

குடியேற் __ம்	நக__கள்	சிங்க__வர்	தீ__கள்
பழ__ குடிகள்	அர__யல்	இ __க்கர்	நா__ர்
எல்லா__ன்	சங்கி__யன்	கோட் __	வ__க்கு
கி__க்கு	தெ__கு	மேற்__	ஈ__ம்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	பெயர்	வினை	இடை	உரி
கடல்				
குடியேறியது				
இதனால்				

மிகவும்				
உறுதுணை				
ஈழம்				
கடிநகர்				

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

ஆண்டளவில் = ________ + ________
அமைந்துள்ளது = ________ + ________
இந்தியாவிலிருந்து = ________ + ________
போர்க்கருவிகள் = ________ + ________
வடமுனை = ________ + ________
பரப்பளவு = ________ + ________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

நாடு + ஆக்கினர் = ________
ஆய்வு + ஆளர் = ________
குடி + ஏறினர் = ________
கை + பற்றினர் = ________
சூழ + பெற்றது = ________
மேற்கு+ பகுதி = ________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

அரசு ________ ஏதிலியர் ________
தீவு ________ புலப் பெயர்வு________
மாநிலம் ________ இணைத்தல் ________
உரிமை ________ தலை நகர் ________
மாகடல் ________ கைப்பற்றினர்________
விடுதலை________ பழங் குடிகள்________

Island Conquered Merge
Right Freedom Refugees
Migration Province State
Natives Capital City Ocean

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

ஆண்டனர் ஆள்வர் ஆளுகின்றனர்
வருவர் வருகின்றனர் வந்தனர்
பேசுகின்றனர் பேசினர் பேசுவர்

கைப்பற்றுகின்றனர்	கைப்பற்றுவர்	கைப்பற்றினர்
வாழ்ந்தனர்	வாழ்வர்	வாழ்கின்றனர்
செல்கின்றனர்	செல்வர்	சென்றனர்
போரிடுவர்	போரிட்டனர்	போரிடுகின்றனர்
அறிந்தனர்	அறிவர்	அறிகின்றனர்

இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்

- பின்வரும் சொற் தொடர்களில் உள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலைச் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

ஐரோப்பியர் இலங்கையை ஆண்டனர்.
நாங்கள் இலங்கையில் வாழ்ந்தோம்.
எனது உறவினர் ஏதிலியர் முகாமில் இருக்கின்றனர்.
போத்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றினர்.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

தெற்கு	இனம்	ஆட்சி மொழி	அறிஞர்
மாகடல்	இயக்கர்	ஏதிலியர்	போராட்டம்

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

THE WORLD OF PLAY – SPORTS PAST AND PRESENT
விளையாட்டு உலகம் - விளையாட்டுகள் அன்றும் இன்றும்

உடல்	ஊர்	ஊக்கம்	மற்போர்
உறுதி	உலகம்	ஓட்டம்	விற்போர்
உள்ளம்	வட்டாரம்	ஈட்டி	வாட்போர்
ஓய்வு	மாவட்டம்	படகு	தேரோட்டம்
மனம்	கிரேக்கர்	துடுப்பு	வாரோட்டம்
மகிழ்ச்சி	சிந்தனை	நீச்சல்	சடுகுடு
ஒழுக்கம்	அரசியல்	'கொக்கி'	கிளித்தட்டு
'ஒலிம்பிக்'	சமயம்	சிலம்பம்	பயிற்சி

விளையாட்டு உடலுக்கு உறுதியைக் கொடுக்கிறது. மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. உளத்தைப் பண் படுத்துகிறது. ஒழுக்கத்தை உருவாக்குகிறது. ஒற்றுமையை வளர்க்கிறது. உடன் பிறந்தோர் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. முயற்சியைத் தூண்டுகிறது. குறிக்கோளை அடைய ஊக்குகின்றது. வெற்றி தோல்வியைச் சமமாக மதிக்கப் பழக்குகின்றது.

சிலர் உடற் பயிற்சிக்காக விளையாடுவர். சிலர் உள ஓய்வுக்காக விளையாடுவர். வேறு சிலர் சிந்தனை வளர்ச்சிக்காக விளையாடுவர். வேறு சிலர் போட்டிக்காக விளையாடுவர். மேலும் சிலர் பொழுது போக்குக்காக விளையாடுவர். இவை போன்ற நோக்கோடு மிகப் பழங்காலம் தொடக்கம் மக்கள் விளையாடி வருகின்றனர். மக்கள் மட்டுமன்றி விலங்குகளும் விளையாடுகின்றன.

சில விளையாட்டுகள் தனியாள் மட்டத்தில் நடைபெறுகின்றன. சில ஊர் மட்டத்தில் நடைபெறுகின்றன. சில வட்டார மட்டத்தில் நடைபெறுகின்றன. சில மாவட்ட மட்டத்தில் நடைபெறுகின்றன. சில மாநில மட்டத்தில் நடைபெறுகின்றன. சில நாட்டு மட்டத்தில் நடைபெறுகின்றன. சில உலக மட்டத்தில் நடைபெறுகின்றன. உலக மட்டத்தில் நடைபெறுவது 'ஒலிம்பிக்' விளையாட்டுப் போட்டி ஆகும்.

'ஒலிம்பிக்' போட்டி கி.மு 776ஆம் ஆண்டு தொடங்கியது. ஏறத்தாழ 1200 ஆண்டு நடைபெற்றது. தியோடசு என்ற அரசன் கி.பி 397ஆம் ஆண்டு இதைத் தடை செய்தான். ஏறத்தாழ 1500 ஆண்டு 'ஒலிம்பிக்' போட்டி நடைபெறவில்லை. மீண்டும் கி.பி 1896ஆம் ஆண்டு 'ஒலிம்பிக்' போட்டி தொடங்கியது. இதைப் புதிய 'ஒலிம்பிக்' என்பர். இதைத் தொடங்கியவர் பியரே பாரொன் ஆவார். இவர் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்.

பழைய 'ஒலிம்பிக்' போட்டி கிரேக்கக் கடவுளை மதிக்கும் நோக்கோடு சமயம் சார்ந்த நிகழ்வாகத் தொடங்கப்பட்டது. கிரேக்க நாட்டில் மட்டுமே நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நடைபெற்றது. இப்போட்டியில் கிரேக்க நாட்டு ஆண்கள் மட்டுமே பங்கு கொண்டனர். 'ஒலிம்பிக்' நடைபெறும் பொழுது அரசியல் பேசப்பட்டது. அரசியற் கூட்டுகள், போட்டிகள்

இடம்பெற்றன. ஓட்டம், மற்போர், ஈட்டி எறிதல் முதலிய விளையாட்டுகள் இடம்பெற்றன.

புதிய 'ஒலிம்பிக்' விரைவு, உயர்வு, வலிவு என்னும் பொன் மொழிகளை அடிப்படையாகக் கொண்டது. இது நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது: வெவ்வேறு நாடுகளில் நடைபெறுகிறது. இதில் உலகின் உள்ள எல்லா நாட்டவரும் பங்கு கொள்கின்றனர். ஆண், பெண் இரு பாலரும் பங்கு கொள்கின்றனர்: கோடை மற்றும் குளிர் கால ஒலிம்பிக் என இரு போட்டிகள் நடைபெறுகின்றன. அரசியல் இடம்பெறுவது இல்லை. மென் பந்து, பூப் பந்து, காற் பந்து, கூடைப் பந்து, படகு ஓட்டம், ஈருருளி ஓட்டம், நீச்சல், உடற் பயிற்சிகள் (Gymnastics), 'கொக்கி', பழு தூக்கல், குதிரை ஓட்டம், சிலம்பம (Fencing) எனப் பல விளையாட்டுகள் இடம் பெறுகின்றன.

பழங் காலத்தில் யானை ஏற்றம், குதிரை ஏற்றம், மற்போர், விற்போர், வாட் போர், சிலம்பம், தேரோட்டம் போன்ற விளையாட்டுகளைத் தமிழ் அரச குடும்பப் பிள்ளைகள் விளையாடினர். இன்று தமிழ் அரச குடும்பம் அற்றுப் போனமையால் இந்த விளையாட்டுகளும் முதன்மை இழந்து விட்டன. கிளித்தட்டு, சடுகுடு, வாரோட்டம், கெந்திப் பிடித்தல், கயிறு அடித்தல், கிட்டியும் புள்ளும் போன்ற விளையாட்டுகளைத் தமிழ்ப் பொது மக்களது பிள்ளைகள் விளையாடினர். இப்பொழுதும் இவர்கள் விளையாடுகின்றனர்.

இன்று பன்னாட்டு மட்டத்தில் துடுப்பாட்டம், கைப்பந்து, காற்பந்து, 'கொக்கி', வலைப்பந்து, தளப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து, தொடர் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குத்துச் சண்டை, நீச்சல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல், பழுத் தூக்கல், கட்டரங்கு (சதுரங்கம்) எனப் பல விளையாட்டுகள் நடைபெறுகின்றன.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

'ஒலிம்பிக்' விளையாட்டின் வரலாறு பற்றிக் கலந்து உரையாடுக.

'ஒலிம்பிக்' சின்னத்தை வரைந்து அதன் விளக்கத்தை எழுதுக.

புதிய 'ஒலிம்பிக்' போட்டியின் பொன் மொழிகள் யாவை?

விளையாட்டின் நோக்கங்கள் ஐந்து தருக.

பன்னாட்டு மட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் யாவை?

தமிழ் அரச குடும்பப் பிள்ளைகளது விளையாட்டுகள் யாவை?

'கிரேக்க நாட்டில் ஒலிம்பிக் 2004' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

உமக்குப் பிடித்த விளாயாட்டு ஒன்றை விளக்கிக் கூறுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உயரம் பாய்தல்				
வலைப் பந்து				
சின்னம்				
நீச்சல்				
'ஒலிம்பிக்'				
உலகம்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
வளர்க்கிறது			
ஏற்படுத்துகிறது			
மக்கள்			
மட்டம்			
மென்பந்து			
கிரேக்கர்			
சார்ந்தது			
கைப்பந்து			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
சிலம்பம்		
வாட்போர்		
கைப்பந்து		
கட்டரங்கு		
நீச்சல்		
கிளித்தட்டு		
தேரோட்டம்		
தட்டெறிதல்		

- ஒத்த சொல் எழுதுக.

உவகை	கால் நடைகள்	வேந்தன்	வேழம்
இறைவன்	கொடுக்கிறது	மதம்	பரி
ஆடவர்			வையகம்

அளிக்கிறது	________	கடவுள்	________
சமயம்	________	யானை	________
விலங்குகள்	________	குதிரை	________
உலகம்	________	அரசன்	________
மகிழ்ச்சி	________	ஆண்கள்	________

- எதிர்ச் சொல் எழுதுக.

பள்ளம் தோல்வி சோம்பல் வெப்பம் முடிவு
உண்டு அமைதி துயரம் வன்மை சுறுசுறுப்பு

வெற்றி	________	மேடு	________
முயற்சி	________	குளிர்	________
தொடக்கம்	________	இல்லை	________
போர்	________	மென்மை	________
மகிழ்ச்சி	________	ஓய்வு	________

- பன்மைச் சொல் எழுதுக.

ஆண்டு	________	வந்தான்	________
போட்டி	________	உள்ளம்	________
போராட்டம்	________	பிள்ளை	________
அது	________	காலம்	________
குடும்பம்	________	நாடு	________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

விளை__ட்டு	வலைப் ப__து	பயி__சி	பழ__கா__ம்
'ஒலி__பிக்'	கிரே__கம்	அர__யல்	ம__போர்
சில__ப__	கிளித்த__டு	தொட__கம்	தே __ட்டம்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	பெயர்	வினை	இடை	உரி
விளையாடினர்				
பெற்றன				
மேலும்				
எனவே				
கிரேக்கர்				
'ஒலிம்பிக்'				
தொங்கியது				
உறுதுணை				
சாலவும்				
போன்ற				

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

விற்போர்	=	______	+	______
மற்போர்	=	______	+	______
தேரோட்டம்	=	______	+	______
வாட்போர்	=	______	+	______
கெந்திப்பிடித்தல்	=	______	+	______
ஈட்டியெறிதல்	=	______	+	______

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

கயிறு + அடித்தல்	=	______
கிளி + தட்டு	=	______
உடல் + பயிற்சி	=	______
பழு + தூக்கல்	=	______
கூடை + பந்து	=	______

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

விளையாட்டு	______	கடவுள்	______
போட்டி	______	ஒற்றுமை	______
சமயம்	______	ஓய்வு	______
ஆண்டு	______	பயிற்சி	______
அடிப்படை	______	நாடு	______
சமம்	______	உலகம்	______

Year	Religion	Basic	Equal
Competition	Sports	Rest	God
Country	Co-operation	World	Exercise

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

வீரர்	கேடயங்கள்	மன்னர்	நாடுகள்
பிள்ளைகள்	விளையாட்டுகள்	போட்டிகள்	ஆடவர்

பலர் பால்	பலவின் பால்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

யான்	நான்	நாங்கள்	நீ
நீவிர்	அவன்	அவள்	அவர்கள்
அவை	யாம்	நீங்கள்	அது

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பின்வரும் சொற்களில் காணப்படும் ரகர, றகர வேறுபாடுகளை அறிக.

பரி	(horse)	பறி	( )
கரி	( )	கறி	( )
அரி	( )	அறி	( )
உரி	( )	உறி	( )
தரி	( )	தறி	( )
எரி	( )	எறி	( )

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

ஊக்கம்	உலகம்	ஒழுக்கம்	ஊர்
சிந்தனை	தடை	அரசியல்	வெற்றி
காற்பந்து	மென்பந்து	சிலம்பம்	தேரோட்டம்

- பின்வரும் பழமொழிகளுக்கு விளக்கம் கூறுக.

ஊக்கம் ஆக்கம் தரும்.
முயற்சி திருவினை ஆக்கும்.
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

THE ENVIRONMENT - CURRENT ENVIRONMENTAL ISSUES
சூழல் - இன்று சூழல் எதிர்நோக்கும் சிக்கல்கள்

நிலம்	நகர்	ஒலி	ஆக்கம்	தூய்மை
நீர்	போர்	கழிவு	துன்பம்	கலத்தல்
வான்	சூழல்	தீமை	கப்பல்	சட்டம்
வளி	மாசு	புகை	குண்டு	நில நெய்
ஆறு	கடல்	எரிதல்	அடைதல்	இழத்தல்
ஏரி	காடு	குப்பை	மின்வலு	பாதுகாப்பு

நிலம், நீர், வான், வளி என்பன எம்மைச் சூழ்ந்து உள்ளன. இவை படிப்படியாகத் தூய்மை இழப்பதைச் சூழல் மாசு அடைதல் என்பர். கைத்தொழில் ஆக்கம், நகர் ஆக்கம், போக்கு வரத்து, போர் முதலியன சூழலை மாசு அடையச் செய்கின்றன. இதனால் எமது வாழ்வுக்குத் துன்பம் வருகிறது.

கைத்தொழில் ஆலைகள் வெளிவிடும் நச்சுப் புகை வளியோடு கலக்கின்றது. ஆலைகளது கழிவு நீர் ஆறு, குளம், கடல் முதலியவற்றில் சேருகின்றது. ஆலைகளது திண்மக் கழிவுகள் நிலத்தில் கொட்டப் படுகின்றன; புதைக்கப் படுகின்றன. இவற்றால் சூழல் மாசு அடைகிறது.

நகர்களை அமைக்கக் காடுகளை அழிக்கின்றனர். இதனால் உயிர் வளி (OXYGEN) குறைந்து கரி வளி (CARBON DIOXIDE) கூடுகிறது. மழை குறைகிறது. மண் அரிப்பு ஏற்படுகிறது. நகர்களில் மக்கள் தொகை கூடுகிறது. இதனால் கழிவு கூடுகின்றது. கண்ட இடங்களிலும் குப்பை போடப் படுகின்றது. இவை உரிய முறையில் அகற்றப் படுவதில்லை. மனிதக் கழிவு நீரில் கலக்கின்றன. இவற்றால் சூழல் மாசு அடைகிறது.

போக்குவரத்துக்குப் பலவகை ஊர்திகளைப் பயன் படுத்துகின்றோம். இவை தீய புகையைக் காற்றில் கலந்து விடுகின்றன. எரிபொருள் கொண்டு செல்லும் கப்பல்கள் கடலில் மூழ்குகின்றன. இதனால் நீர் வாழ்வன நச்சுத் தன்மை அடைகின்றன. இவ்வாறு உண்ணும் மக்களுக்குத் தீங்கு வருகிறது. தொடர் வண்டிகள், வான் ஊர்திகள் பெரும் இரைச்சலை எழுப்புகின்றன. இவற்றால் ஒலி மாசு அடைகின்றது.

போர் நடக்கும் பொழுது நச்சுக் குண்டுகளை வீசுகின்றனர். அணுக் குண்டுகளைப் போடுகின்றனர். நில நெய்க் கிணறுகளுக்குத் தீ வைக்கின்றனர். நீர் நிலைகளில் நஞ்சைக் கலக்கின்றனர். போரில் இறப்போரை எரிக்காமல், புதைக்காமல் அப்படியே விட்டு விடுகின்றனர். இவற்றால் சூழல் மாசு அடைகின்றது.

சூழல் மாசு அடைவதால் வரும் தீமையை மக்களுக்கு விளக்குதல், ஆலைகள் சூழல் பாதுகாப்புச் சட்டத்தை மதித்து நடத்தல், சூழல் பாதுகாப்புச் சட்டத்தை மதியாத ஆலைகளை மூடிவிடல், ஊர்திகள் நில நெய்ப் பயன்பாட்டைக் குறைத்தல், நீர்மின்வலு, பரிதிவலுப் பயன்பாட்டைக்

கூட்டல், நகர்களில் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்தல், நகர்களைப் பரவல் ஆக்கல், போர்களைத் தவிர்த்தல் முதலியவற்றால் சூழல் மாசு அடையாமல் தடுக்கலாம்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  எம்மைச் சூழ்ந்து உள்ளவை எவை?

  எவை சூழலை மாசு அடையச் செய்கின்றன?

  காடுகளை அழிப்பதால் சூழல் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது?

  போர் நடக்கும் பொழுது எதற்குத் தீ வைக்கின்றனர்?

  ஊர்திகளும் ஆலைகளும் சூழலை எவ்வாறு மாசு அடையச் செய்கின்றன என்பதைப் பற்றி ஆராய்க.

  'எமது நகரைத் தூய்மையாக வைத்திருப்போம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
அடைதல்				
அழித்தல்				
கைத்தொழில்				
ஊர்திகள்				
பாதுகாப்பு				
எஃகு				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
விளக்குதல்			
போக்குவரத்து			
சட்டம்			
ஊர்திகள்			
தீங்கு			
ஆக்கல்			
சூழ்ந்து			

- பின்வரும் சொற்களை குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
ஏரி மலை		
பேரிடர்		
நச்சுப்புகை		
மேற்கொள்ளல்		
தீங்கு		
அறிவியல்		

- ஒத்த சொல் எழுதுக.

நதி பரவை காற்று அழுக்கு சுற்றாடல்
விண் வனம் கதிரவன் ஏரி தொழிற்கூடம்

மாசு ______________ வளி ______________
ஆறு ______________ கடல் ______________
ஆலை ______________ குளம் ______________
வான் ______________ பரிதி ______________
காடு ______________ சூழல் ______________

- எதிர்ச் சொல் எழுதுக.

ஆக்கல் பிரிதல் திறத்தல் அமைதி பிறத்தல்
நன்மை தூய்மை பெறுதல் சிறிய குறைத்தல்

சேருதல் ______________ இழத்தல் ______________
அழித்தல் ______________ கூடுதல் ______________
பெரிய ______________ தீமை ______________
மூடுதல் ______________ மாசு ______________
போர் ______________ இறத்தல் ______________

- பன்மைச் சொல் எழுதுக.

இனம் ______________ வனம் ______________
மரம் ______________ குளம் ______________
எது ______________ பொருள் ______________
அது ______________ இது ______________
அவன் ______________ நான் ______________
ஏரி ______________ மாந்தன் ______________
போட்டி ______________ விளையாட்டு ______________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

__ ணுக் குண்டு விலங்__ னம் துர் நா__ றம்
போக்குவ__ த்து மாச__ தல் வற__ சி

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

தூய்மை செய்கின்றன கலந்தன கைத்தொழில் நகர்
அடைகிறது எழுப்புகின்றன சேருகிறது மக்கள் நிலம்

பெயர்ச் சொல்	வினைச் சொல்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

மண்ணரிப்பு = ____________ + ____________
மாசடைதல் = ____________ + ____________
நச்சுக்குண்டு = ____________ + ____________
நெய்ப்பாவனை = ____________ + ____________
பரிதிவலு = ____________ + ____________
பேரிடர் = ____________ + ____________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

கை + தொழில் = ____________
வளி + ஓடு = ____________
நகர் + ஆக்கம் = ____________
பாதுகாப்பு + சட்டம் = ____________
நகரம் + மக்கள் = ____________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

நிலம் ____________ நகராக்கம் ____________
வான் ____________ நச்சுப்புகை ____________
நீர் ____________ ஊர்தி ____________
தீமை ____________ கைத்தொழிலாக்கம் ____________
போர் ____________ போக்குவரத்து ____________
காடு ____________ நீர்மின்வலு ____________
வளி ____________ பரிதிவலு ____________

Space	Air	Water
Harm	War	Forest
Vehicles	Urbanization	Transportation
Toxic Smoke	Hydro Power	Land
Solar Energy	Industrialization	

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

ஊர்தி	ஆலைகள்	நகரம்	குளம்
காடுகள்	கப்பல்கள்	கிணறுகள்	ஆயுதம்

ஒன்றன் பால்	பலவின் பால்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

அடைகிறது	கவனிக்கிறேன்	எறிகிறாய்
குறைக்கிறேன்	வெட்டுகின்றனர்	போடுகின்றாய்
அழித்தாய்	வைக்கின்றான்	மூடினேன்
கொட்டினேன்	அமைத்தாய்	புதைக்கின்றனர்

தன்மை	முன்னிலை	படர்க்கை

- பின்வரும் சொற்களைப் பொருத்துக.

கிணறுகள்	புகை	கரை	சாரல்
அரிப்பு	கொல்லி	காடு	பெருக்கு

கடற் ______________

மண் ______________

அடர்ந்த ______________

மலைச் ______________

நில நெய்க் ______________

வெள்ளப் ______________

கிருமி ______________

நச்சுப் ______________

- பின்வரும் சொற் தொடர்களில் உள்ள எழுவாய், பயனிலை, மற்றும் செயப்படுபொருளை உரிய கட்டங்களுள் எழுதுக.

  எதிரிகள் நச்சுக் குண்டுகளை வீசினர்.
  மக்கள் காடுகளை அழிக்கின்றனர்.
  சிலர் கழிவுகளை நிலத்தில் கொட்டுகின்றனர்.
  ஊர்திகள் தீய புகையை வளியில் கலக்கின்றன.
  சூழல் தூய்மையை இழக்கின்றது.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

நிலம்	நீர்	வான்	வளி	போர்
ஊர்தி	சூழல்	தூய்மை	ஒலி	மாசு

- பின்வரும் சொற்களின் லகர, ளகர, ழகர வேறுபாடுகளை அறிக.

ஒலி	(sound)	ஒளி	( )	ஒழி	( )
கலி	( )	களி	( )	கழி	( )
அலி	( )	அளி	( )	அழி	( )
வலி	( )	வளி	( )	வழி	( )
கிலி	( )	கிளி	( )	கிழி	( )

- பின்வரும் பழமொழிகளுக்கு விளக்கம் கூறுக.

  ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

  தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

  மனம் உண்டானால் இடம் உண்டு.

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement   S- Satisfactory   G- Good   E – Excellent

CELEBRATIONS AND SPECIAL EVENTS - RECOGNITION OF PROMINENT HERITAGE AUTHOR

விழாக்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் - முதன்மை மரபு நூலாசிரியரை மதித்தல்

அழகு	தமிழ்	கலை	ஈழ நாடு
வளம்	தந்தை	பண்பாடு	சோழ நாடு
மலை	மகன்	வீரம்	சேர நாடு
மிளகு	புலவர்	விருந்து	பாண்டிய நாடு
யானை	அரசன்	நீதி	தலை நகர்
உடல்	தலைமை	ஆடல்	மூத்தவன்
உறுப்பு	சண்டை	மதிப்பு	இளையவன்
ஆட்சி	நகர்	காப்பியம்	அரசவை

முற்காலத்தில் ஈழ நாடு, சோழ நாடு, சேர நாடு, பாண்டிய நாடு என நான்கு தமிழ் அரசுகள் இருந்தன. ஈழ நாட்டுத் தலை நகர் யாழ்ப்பாணம், சோழ நாட்டுத் தலை நகர் பூம்புகார், சேர நாட்டுத் தலை நகர் வஞ்சி, பாண்டி நாட்டுத் தலை நகர் மதுரை ஆகும்.

சேர நாடு அழகு மிக்கது, வளம் நிறைந்தது, ஆறு, கடல் மற்றும் மலையும் கொண்டது. இங்கே சந்தனமும் மிளகும் மிகுதியாகக் கிடைத்தன. யானைகள் அதிகம் வாழ்ந்தன. சேர நாட்டை நெடுஞ் சேரலாதன் என்ற அரசன் ஆண்டான். இவன் வஞ்சியில் இருந்து ஆட்சி செய்து வந்தான்.

இந்த அரசனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். மூத்தவன் பெயர் செங்குட்டுவன், இளையவன் பெயர் இளங்கோ ஆகும். ஒரு நாள் அரசன் தனது பிள்ளைகளோடு அரசவையில் இருந்தான். அப்பொழுது ஒரு நிமித்தகன் அரசனைப் பார்க்க வந்தான்.

வந்த நிமித்தகன், இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் பார்த்தான். அவர்களது பிறந்த நேர காலங்களையும் கணித்தான். உடல் உறுப்புகளை உற்று நோக்கினான். இதன்பின் அரசனிடம், "தங்கள் பிள்ளைகளுள் இளையவனே தங்களுக்குப் பின் ஆட்சிக்கு வருவான், மூத்தவன் ஆட்சிக்கு வரும் வாய்ப்பு இல்லை" என்றான்.

நிமித்தகன் கூறியதை இளங்கோ ஒப்புக் கொள்ளவில்லை. இந்தச் சோதிடம் பொய் என்றார். அரச முறைப்படி தமையன் செங்குட்டுவனே ஆட்சிக்கு வருவான் என்றார். இதை உறுதிப்படுத்த இளங்கோ துறவியாக முடிவு செய்தார். தமையன் செங்குட்டுவன் சேர நாட்டு அரசன் ஆனான். நிமித்தகன் சொல் பொய்யானது. தமிழர் பகுத்தறிவாளர் என்பது உறுதியானது.

இளங்கோ, பிற்காலத்தில் மிகச் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். தமையன் செங்குட்டுவன் அரசவையில் புலவராக இருந்தார். ஒரு நாள் சேரன் செங்குட்டுவனும் புலவர்களும் பிறரும் மலை வளம் காணச் சென்றனர். அப்பொழுது மலை வாழ் மக்கள் அரசனைக் காண வந்தனர்.

அவர்கள், தாம் ஒரு பெண்ணைக் கண்டதாகவும் அவள் தமது கடவுள் வள்ளி போல் இருந்ததாகவும் கூறினர்.

சேரன் செங்குட்டுவன், தலைமைப் புலவர் சாத்தனாரிடம் இந்தப் பெண் யார் என வினாவினான். சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறினார். அரசன் அதைக் காப்பியமாகப் படைக்க வேண்டும் என்றான். "இளங்கோவே அதைச் செய்யும் தகுதி படைத்தவர்" எனச் சாத்தனார் கூறினார். இளங்கோ கோவலன் கண்ணகி கதையைச் "சிலப்பதிகாரம்" என்னும் காப்பியமாகப் படைத்தார். இதுவே தமிழில் தோன்றிய முதற் காப்பியம் ஆகும்.

சிலப்பதிகாரம் தமிழர் பண்பாடுகளை எடுத்துக் காட்டும் ஒரு காப்பியம் ஆகும். இளங்கோ தமக்குள் சண்டை இட்ட தமிழ் அரசர்களை ஒன்றிணைக்க விரும்பினார். இதனால், இந்தக் காப்பியப் பிரிவுகளுக்கு புகார், மதுரை, வஞ்சி என்று சேர, சோழ, பாண்டிய நாட்டுத் தலை நகர்களது பெயர்களைச் சூட்டினார்.

இளங்கோ சிலப்பதிகாரத்தில் தமிழரது விருந்தோம்பல், வாழ்க்கை முறை, கலைகள், சமயங்கள் போன்றவற்றை எடுத்துக் கூறினார். தமிழரது கட்டடக் கலை அறிவு, நகரத் திட்டமிடல் அறிவு முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டினார். தமிழரது ஆடற் கலைக்கு வரைவு இலக்கணம் வகுத்தார். தமிழ் அரசரது வீரத்தை, அறம் வழுவா ஆட்சி முறையை, எடுத்து உரைத்தார். பண்டைத் தமிழர் பண்பாடு பற்றிய செய்தியை எமக்கு அளித்த இளங்கோவை மதிப்போம். சிலப்பதிகாரத்தைப் படிப்போம்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

முற்காலத்தில் இருந்த நான்கு தமிழ் அரசுகளும் எவை?

சோழ நாட்டுத் தலை நகர் எது?

சேர நாட்டை ஆண்ட அரசன் யார்?

இளங்கோ என்ன செய்ய முடிவு செய்தார்?

சாத்தனார் யாரது கதையைச் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறினார்?

சிலப்பதிகாரக் காப்பியத்தைப் படைத்தவர் யார்?

சிலப்பதிகாரம் எதனை எடுத்துக் காட்டுகிறது?

தமிழில் தோன்றிய முதற் காப்பியம் எது?

ஆசிரியர் துணையுடன் ஐம்பெருங் காப்பியங்கள் பற்றிக் கலந்து உரையாடுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
இளங்கோ				
புலவர்				
கோவலன்				
கண்ணகி				
சிலப்பதிகாரம்				
ஆடற்கலை				
காப்பியம்				
அரசன்				
நிமித்தகன்				
இலக்கியம்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
மூத்தவன்			
இளையவன்			
சிலப்பதிகாரம்			
சாத்தனார்			
காப்பியம்			
தந்தை			
பூம்புகார்			
வஞ்சி			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
காப்பியம்		
துறவி		
நோக்கினான்		
கோவலன்		
பகுத்தறிவாளர்		
இயற்றினார்		
எளிமை		
ஆடல்		
நிமித்தகன்		

- ஒத்த சொல் எழுதுக.

நடனக் கலை	சோதிடன்	பரவை	வனப்பு	இலங்கை
சொன்னார்	கேள்வி	மகளிர்	அண்ணன்	மன்னன்

ஈழநாடு ____________ தமையன் ____________
அழகு ____________ பெண்கள் ____________
கடல் ____________ வினா ____________
கூறினார் ____________ ஆடற் கலை ____________
அரசன் ____________ நிமித்தகன் ____________

- எதிர்ச் சொல் எழுதுக.

போவான்	கடைசி	மெய்	குறைவாக	முன்
உண்டு	இறப்பு	ஆண்டி	இளையவன்	இக்காலம்

முற்காலம் ____________ பிறப்பு ____________
மூத்தவன் ____________ இல்லை ____________
பொய் ____________ பின் ____________
நிறைவாக ____________ முதல் ____________
வருவான் ____________ அரசன் ____________

- பன்மைச் சொல் எழுதுக.

அரசு ____________ நான் ____________
வனம் ____________ துறவி ____________
பெண் ____________ காப்பியம் ____________
நகர் ____________ கலை ____________
தனது ____________ கதை ____________

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	பெயர்	வினை	இடை	உரி
இளங்கோ				
கிடைத்தன				
போல				
எரித்தாள்				
சேரன்				
பாண்டியன்				
தவச்செயல்				
இதனால்				
சாலச்சிறந்தது				
சிலம்பு				
உறுபசி				

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

இ __ங்கோ	காப் __யம்	ப__பாடு	பூம் __கார்
கோ__லன்	இலக்க__ம்	சிலப்ப__காரம்	வ__சி
நிறை__தது	பிள் __கள்	நி__த்தகன்	சோ__ன்

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

யாமறிந்த = ________________ + ________________
பிற்காலம் = ________________ + ________________
ஆடற்கலை = ________________ + ________________
சிலம்புக்கதை = ________________ + ________________
இளங்கோவடிகள் = ________________ + ________________
பண்டைத்தமிழர் = ________________ + ________________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

ஒன்று + இணைக்க = ________________
கட்டடம் + கலை = ________________
தாராளம் + மனம் = ________________
எடுத்து + காட்டு = ________________
முதல் + காப்பியம் = ________________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

அரசன்	________________	புலவர்	________________
அரசு	________________	கூறினார்	________________
வினாவினர்	________________	காப்பியம்	________________
தலைநகர்	________________	ஆட்சி	________________
பண்பாடு	________________	பார்த்தனர்	________________

Poet	Said	Asked	Looked	Culture
Rule	Kingdom	Epic	King	Capital City

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக

படிப்பேன்	படிக்கிறேன்	படித்தேன்
வந்தோம்	வருகிறோம்	வருவோம்
பார்க்கிறாய்	பார்த்தாய்	பார்ப்பாய்
இருந்தீர்	இருக்கின்றீர்	இருப்பீர்
எழுதினான்	எழுதுவான்	எழுதுகின்றான்
சிரிப்பான்	சிரித்தான்	சிரிக்கின்றான்

ஓடினர்	ஓடுகின்றனர்	ஓடுவர்
குடிக்கின்றது	குடிக்கும்	குடித்தது
வரைந்தேன்	வரைகின்றேன்	வரைவேன்

இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்

- பின்வரும் சொற் தொடர்களில் உள்ள எழுவாய், பயனிலை, மற்றும் செயப்படுபொருளை உரிய கட்டங்களுள் எழுதுக.

கோவலன் கண்ணகியை மணந்தான்.
மாதவி நடனம் ஆடினாள்.
கண்ணகி சிலம்பை எறிந்தாள்.
கண்ணகி மதுரையை எரித்தாள்.
மக்கள் கண்ணகியை வணங்கினர்.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

வளம்	யானை	சிலம்பு	பண்பாடு	விருந்து
காப்பியம்	புலவர்	பூம்புகார்	கலை	வீரம்

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

INTRODUCTION TO LITERATURE – POETRY
இலக்கிய அறிமுகம் - பாரதியார் பாக்கள்

யாப்பு	தொழுது	பாக்கள்	மாற்றம்
சொல்	இனிது	பல்லாயிரம்	வள்ளுவர்
ஆற்றல்	உண்மை	தமிழ்	இளங்கோ
எளிமை	புகழ்ச்சி	ஆங்கிலம்	கம்பன்
பொருள்	விழைதல்	சமற்கிருதம்	திருக்குறள்
ஓசை	இயற்றல்	வங்காளம்	சிலப்பதிகாரம்
மதிப்பு	அறிவியல்	இந்தி	இலக்கியம்

தமிழில் 2500 ஆண்டு பழமையான பல்லாயிரம் பாக்கள் உள்ளன. ஆயிரத்துக்கு மேற்பட்ட புலவோர் இவற்றைப் பாடி உள்ளனர். இந்தப் பாக்கள் தமிழ்ப் பா யாப்பு முறைப்படி பாடப் பெற்றவை; கடினமான சொற்கள் கொண்டவை. பாமர மக்களால் புரிய முடியாதவை. இத்தகைய தமிழ்ப் பா உலகில், பாரதியார் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார்.

பாரதியார் தமிழ்ப் பா யாப்பு முறைகளை நன்கு அறிவார். பாரதியாருக்கு அவற்றில் பாடும் ஆற்றல் இருந்தது. எனினும், அவர் அவற்றில் பாட விரும்பவில்லை. பாமரர் புரியக் கூடிய எளிய முறையில் பாடினார். எழுத்து அறியா ஏழைக்கும் இன்பம் அளிக்கக் கூடிய வகையில் பாடினார். அவரது சொல், பொருள், ஓசை என்பவற்றில் ஒரு புதுமை தெரிந்தது. பின்வரும் பாடல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

> "ஓடி விளையாடு பாப்பா – நீ
> ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
> கூடி விளையாடு பாப்பா – ஒரு
> குழந்தையை வையாதே பாப்பா"

பாரதியாரது சொந்த ஊர் எட்டயபுரம் ஆகும். இது தமிழ் நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இந்த ஊரில் கி.பி. 1882ஆம் ஆண்டு பாரதியார் பிறந்தார். தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர், தாயார் பெயர் இலக்குமி அம்மாள் ஆகும். பாரதியார் இளமையிலேயே பா இயற்றும் திறமை கொண்டு இருந்தார்.

பாரதியார் காலத்தில் தமிழ் உலகம் ஐரோப்பியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. தமிழ் மொழியை மக்கள் மதியாத நிலை காணப்பட்டது. தமிழர் சாதி, சமயம் எனப் பிரிந்து நின்றனர். பெண் அடிமை நிலவியது. பாரதியார் இவற்றைக் கண்டு கவலை கொண்டார். தனது பாக்கள் வழியாக இவற்றை மாற்ற விரும்பினார்.

பாரதியார் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம், இந்தி, வங்காளம் முதலிய மொழிகளை அறிந்தவர். அவற்றைத் திறம்படக் கையாளும் ஆற்றல் கொண்டிருந்தார். எனினும், தமிழே உலக மொழிகளில் சிறந்தது என்பது

அவர் கருத்து ஆகும். பின்வரும் பாடல் அவரது இக்கருத்தை எடுத்து உரைக்கின்றது.

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்."

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

"செந்தமிழ் நாடென்னும் போழ்தினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

பாரதியார், தமிழ்மொழி தமிழரோடு நின்று விடக்கூடாது, அதற்கு அப்பால் செல்ல வேண்டும், உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்று விரும்பினார். எனவே,

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாடினார்.

பாரதியார் பிற மொழிப் புலவோரை அறிந்து இருந்தார். அவர்கள் பாடிய பாடல்களைப் படித்திருந்தார். அவர்கள் படைத்த இலக்கியங்களையும் தெரிந்திருந்தார். எனினும் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றுக்கு சமமாக எதுவும் இல்லை என்பதைக் கண்டார். இவற்றைப் படைத்த தமிழ்ப் புலவவோரை மிகவும் உயர்வாக மதித்தார். தொடரும் பாடல் இதனை எடுத்துக்காட்டுகிறது.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்காணுமே பிறந்ததில்லை.
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை."

பாரதியார் பழமை போற்றியதோடு நிற்கவில்லை. புதிய நூல்கள் தமிழில் படைக்க விரும்பினார். அறிவியல் நூல் தமிழில் ஆக்க விழைந்தார். கீழ்வரும் பாடல் அவரது உள்ளத்தை எடுத்துக் காட்டுகிறது.

"இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்."

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்."

"வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி" என்று வாயார வாழ்த்தினார். "எங்கள் தமிழ் மொழி, எங்கள் தமிழ் மொழி, என்றென்றும் வாழியவே" என்று உளமார உரைத்தார்.

பாரதியார் தமிழில் மாறாத பற்றுக் கொண்டவர். அவர் தமிழுக்குச் செய்த தொண்டு சாலச் சிறந்தது. பாரதியார் 1921ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவரது புகழ் தமிழ் மொழி உள்ள அளவும் நிலைத்து நிற்கும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  பாரதியார் பாடல்களுக்கும் பழைய பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றிக் கலந்து உரையாடுக.

  உலக மொழிகளில் சிறந்தது தமிழ் மொழி என்று எப்பாடல்களில் உறுதியாகக் கூறுகின்றார்?

  நீர் விரும்பும் பாரதி பாடல் ஒன்றை அதன் விளக்கத்தோடு எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உண்மை				
இனிது				
ஆங்கிலம்				
அறிவியல்				
ஓசை				
இலக்கியம்				
வெண்பா				
கம்பர்				
எழுத்து				
செய்யுள்				
நாடகம்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
உண்மை			
கம்பன்			
ஆங்கிலம்			
அறிவியல்			
வள்ளுவர்			
இளங்கோ			
பாக்கள்			
அறிவியல்			
யாப்பு			

அவர் கருத்து ஆகும். பின்வரும் பாடல் அவரது இக்கருத்தை எடுத்து உரைக்கின்றது.

“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்.”

“சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா”

“செந்தமிழ் நாடென்னும் போழ்தினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே”

பாரதியார், தமிழ்மொழி தமிழரோடு நின்று விடக்கூடாது, அதற்கு அப்பால் செல்ல வேண்டும், உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்று விரும்பினார். எனவே,

“தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்” என்று பாடினார்.

பாரதியார் பிற மொழிப் புலவோரை அறிந்து இருந்தார். அவர்கள் பாடிய பாடல்களைப் படித்திருந்தார். அவர்கள் படைத்த இலக்கியங்களையும் தெரிந்திருந்தார். எனினும் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவற்றுக்கு சமமாக எதுவும் இல்லை என்பதைக் கண்டார். இவற்றைப் படைத்த தமிழ்ப் புலவவோரை மிகவும் உயர்வாக மதித்தார். தொடரும் பாடல் இதனை எடுத்துக்காட்டுகிறது.

“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்காணுமே பிறந்ததில்லை.
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.”

பாரதியார் பழமை போற்றியதோடு நிற்கவில்லை. புதிய நூல்கள் தமிழில் படைக்க விரும்பினார். அறிவியல் நூல் தமிழில் ஆக்க விழைந்தார். கீழ்வரும் பாடல் அவரது உள்ளத்தை எடுத்துக் காட்டுகிறது.

“இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.”

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.”

“வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி” என்று வாயார வாழ்த்தினார். “எங்கள் தமிழ் மொழி, எங்கள் தமிழ் மொழி, என்றென்றும் வாழியவே” என்று உளமார உரைத்தார்.

பாரதியார் தமிழில் மாறாத பற்றுக் கொண்டவர். அவர் தமிழுக்குச் செய்த தொண்டு சாலச் சிறந்தது. பாரதியார் 1921ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவரது புகழ் தமிழ் மொழி உள்ள அளவும் நிலைத்து நிற்கும்.

- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

  பாரதியார் பாடல்களுக்கும் பழைய பாடல்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றிக் கலந்து உரையாடுக.

  உலக மொழிகளில் சிறந்தது தமிழ் மொழி என்று எப்பாடல்களில் உறுதியாகக் கூறுகின்றார்?

  நீர் விரும்பும் பாரதி பாடல் ஒன்றை அதன் விளக்கத்தோடு எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து
உண்மை				
இனிது				
ஆங்கிலம்				
அறிவியல்				
ஓசை				
இலக்கியம்				
வெண்பா				
கம்பர்				
எழுத்து				
செய்யுள்				
நாடகம்				

- கீழே தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள மெய் எழுத்துகளைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	வல்லினம்	மெல்லினம்	இடையினம்
உண்மை			
கம்பன்			
ஆங்கிலம்			
அறிவியல்			
வள்ளுவர்			
இளங்கோ			
பாக்கள்			
அறிவியல்			
யாப்பு			

- பின்வரும் சொற்களைக் குறில் மற்றும் நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களாகத் தெரிந்து எழுதுக.

சொற்கள்	குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்	நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள்
ஆற்றல்		
வாழ்த்து		
பாரதியார்		
ஆங்கிலம்		
அறிவியல்		
நாட்டுப் பற்று		
எளிமை		
இலக்கியம்		

- ஒத்த சொல் எழுதுக.

பாடல்கள் மகிழ்ச்சி திறமை கல்லாதவர் செய்தல்
விரும்புதல் ஏடு வணங்குதல் பா அமைப்பு ஒலி

பாக்கள் ________________ நூல் ________________
யாப்பு ________________ தொழுதல் ________________
பாமரர் ________________ விழைதல் ________________
ஆற்றல் ________________ இயற்றல் ________________
இன்பம் ________________ ஓசை ________________

- எதிர்ச் சொல் எழுதுக.

வெறுப்பு தாழ்வு அழித்தல் இறப்பு செல்வன்
தூற்றுதல் இகழ்ச்சி அறியாதவர் புதுமை பொய்

ஏழை ________________ புகழ்ச்சி ________________
விருப்பு ________________ அறிந்தவர் ________________
உயர்வு ________________ உண்மை ________________
பிறப்பு ________________ பழமை ________________
ஆக்கல் ________________ போற்றுதல் ________________

- பன்மைச் சொல் எழுதுக.

பா ________________ மொழி ________________
எழுத்து ________________ அணி ________________
சொல் ________________ இலக்கியம் ________________
பொருள் ________________ இலக்கணம் ________________
யாப்பு ________________ நாடகம் ________________
பெண் ________________ குழந்தை ________________

- கீறிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுக.

வள்__ வன்	பு__ட்சி	இ __ங்கோ	யா__பு
க __பன்	இய__றல்	தி __க்குறள்	இலக்__யம்
சில __ப __காரம்	பு__வர்	பாக் __ள்	இலக்க__ம்

- பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

சொற்கள்	பெயர்	வினை	இடை	உரி
புலவர்				
பாக்கள்				
பாடினார்				
சாலச்சிறந்த				
எனினும்				
தவப்பயன்				
மொழி				
களிபேருவகை				
போல				

- பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

பல்லாயிரம் = ________________ + ________________
கருத்தாகும் = ________________ + ________________
தமிழரோடு = ________________ + ________________
படித்திருந்தார் = ________________ + ________________
தமிழோசை = ________________ + ________________

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

உலகம் + எல்லாம் = ________________
பிறந்தது + இல்லை = ________________
யாம் + அறிந்த = ________________
புகழ் + உடைய = ________________
நாடு + என்னும் = ________________

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல் தருக.

பாக்கள்	________________	பரவுதல்	________________
எளிமை	________________	மதிப்பு	________________
அறிவியல்	________________	பல்லாயிரம்	________________
மரபுவழி	________________	இலக்கியம்	________________
ஆற்றல்	________________	இலக்கணம்	________________

Grammar	Science	Poems	Simple	Literature
Ability	Thousands	Respect	Spread	Traditional

- பின்வரும் வினை அடிகளைப் பயன்படுத்திச் சொற்கள் உருவாக்குக. அவற்றைப் பொருத்தமான கட்டங்களுள் எழுதுக.

வினை அடி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
பாடு			
இயற்று			
எழுது			
நடி			
நினை			
கூறு			
செய்			
படி			
விளையாடு			
அறி			
இரு			

- பின்வரும் சொற் தொடர்களில் உள்ள எழுவாய், பயனிலை, மற்றும் செயப்படுபொருளை உரிய கட்டங்களுள் எழுதுக.

பாரதியார் பாட்டுப் பாடினார்.
பாமரர் மகிழ்ச்சி அடைந்தனர்.
திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
இளங்கோ சிலப்பதிகாரத்தை எழுதினார்.
நாங்கள் தமிழைப் படிக்கிறோம்.

எழுவாய்	செயப்படுபொருள்	பயனிலை

- பின்வரும் சொற்களது பொருள் விளங்குமாறு சொற் தொடர்கள் எழுதுக.

ஆற்றல்	எளிமை	யாப்பு	விழைதல்
பாக்கள்	மாற்றம்	உண்மை	இயற்றல்

மதிப்பீடு:

	N	S	G	E
கூர் நோக்கு				
பேச்சு				
வாசிப்பு				
எழுத்து				

N- Needs Improvement S- Satisfactory G- Good E – Excellent

ETHICAL LITERATURE – THIRUKKURAL
அற இலக்கியம் - திருக்குறள்

1. **இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
   வேளாண்மை செய்தல் பொருட்டு. (81)

   குடும்பமாக இருந்து செல்வத்தைக் காப்பாற்றி
   வாழ்வது, விருந்தினரைப் பேணி அவர்களுக்கு
   உதவுவதற்காகவே ஆகும்.

2. **விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
   மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று. (82)

   சாவைத் தடுக்கும் மருந்தே ஆனாலும், விருந்தினரை
   வீட்டுக்கு வெளியே இருக்கச் செய்து, தான் மட்டும்
   உண்ணுவது கூடாது.

3. **வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
   பருவந்து பாழ்படுதல் இன்று. (83)

   வருகின்ற விருந்தினருக்கு உதவுபவருடைய
   வாழ்க்கை, சீர்கெட்டு அழிவது இல்லை.

4. **அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
   நல்விருந்து ஓம்புவான் இல். (84)

   முக மலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுபவர்
   வீட்டில், திருமகள் மன மலர்ச்சியோடு குடியிருப்பாள்.

5. **வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி**
   மிச்சில் மிசைவான் புலம். (85)

   விருந்தினருக்கு உணவளித்து, எஞ்சியதை உண்பவன்
   நிலத்தில் விதை விதைக்கவும் வேண்டுமோ? அவனது
   பயிர் தானாகவே வளரும்.

ETHICAL LITERATURE – THIRUKKURAL
அற இலக்கியம் - திருக்குறள்

6. **செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (86)**

வந்த விருந்தினருக்கு உதவி, இனி வரும் விருந்தினருக்காகக் காத்திருப்பவன், தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான்.

7. **இனைத்துணைத்து என்பதுஒன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (87)**

விருந்து ஓம்பல் ஆகிய குமுகாய வேள்வியின் பயன் இவ்வளவு என்று கூற முடியாது. வரும் விருந்தினரின் பண்பிற்கு ஏற்பப் பயன் உண்டாகும்.

8. **பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர் விருந்துஓம்பி
வேள்வி தலைப்படா தார். (88)**

விருந்தினரைப் பேணித் தம் குமுகாயக் கடமையைச் செய்யாதவர், பின்னர், 'பொருளையே பெரிதாக எண்ணி, அதனைப் காத்து வைத்துக் குமுகாய உறவை இழந்தோமே', என வருந்துவர்.

9. **உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு. (89)**

செல்வ நிலையிலும் வறுமை என்பது, விருந்தினரைப் போற்றாத மடமை ஆகும். இந்த மடமை அறிவு அற்றவர் இடமே காணப்படும்.

10. **மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90)**

அனிச்சமலர் முகர்ந்து பார்த்த அளவில் வாடிவிடும். விருந்தினர் முகம் திரிந்து பார்த்த அளவிலேயே வாடிவிடுவர்.

தமிழ் எழுத்துகள்

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ